அரசு ஊழியர்

மே 2018

மலர் : 39 இதழ் : 5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

## சூடாக ஒரு கோப்பை சூப்

### சரித்திரச் சக்கரங்கள்

தாக்குண்டால் புழுகூடத்
தரைவிட்டுத் துள்ளும்
கழுகு தூக்கிட தன் குஞ்சு
காத்திட துடித்தெழும் கோழி
சிங்கம் மூர்க்கமாய் தாக்கும் போது
சிறு முயல்கூட எதிர்த்து நிற்கும்
சாக்கடை கொசுக்களா நாம்
சரித்திரச் சக்கரங்கள்.

**- தணிகைச் செல்வன்**

# "மீண்டும் பகை முடிக்கும் பணி முடிப்போம்"

*சமீபத்தில் சேலத்தில் பேசிய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், "தமிழக அரசு வரி வருவாயில், அரசு ஊழியர்கள் ஊதியம், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் ஆகியவற்றுக்கு அரசின் வருவாயில் 61 சதவீதம் செலவாகிறது. எனவே, ஊதிய உயர்வு கேட்டு போராடும் அரசு ஊழியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்று மக்களுக்கு தெரிவித்துள்ளார்.*

*இவரது பேச்சு நமக்கு 2001ஆம் ஆண்டினை ஞாபகப்படுத்துகிறது. 24.7.2001ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலகத்தை திறந்து வைத்து "அரசின் வருவாயில் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் 98 சதவீதம் வழங்கப்படுகிறது" என்று பேசினார். அன்றைய தினமே, நமது சங்கத்தின் சார்பில் முதலமைச்சருக்கு பதில் அளிக்கப்பட்டது.*

*இதன் தொடர்ச்சியாக அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த உரிமைகள் சிலவற்றை சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் பறித்தார். பொறுத்துக் கொள்ள முடியாத அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், தலைமைச் செயலக ஊழியர்களும் 2003-ல் இணைந்து நடத்திய மாபெரும் போராட்டம் இமாலய வெற்றியை பெற்றதோடு இல்லாமல், முதல்வரின் கருத்து பிரச்சாரம் எடுபடாமல், மக்களை சந்தித்து 2004ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அதிமுக அரசுக்கு ஒரு இடம் கூட கிடைக்காத நிலையை அரசியல் பிரவேசத்தை நாம் நிலைநாட்டினோம் என்பது இன்றைய முதல்வருக்கு தெரியாததல்ல. அதுமட்டுமல்ல 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் அதிமுக படுதோல்வியை சந்தித்தது.*

*தவறான ஒரு பொய்ப் பிரச்சாரத்தை தமிழக முதல்வர் கட்டவிழ்த்து விட்டுள்ளார். இதை இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பது நமக்கு தெரியும். அரசு கஜானாவில் இருக்க வேண்டிய கோடிகள் அவரவர் வீடுகளில் சேர்த்து வைத்துக் கொண்டு மக்கள் நலத் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்கிற அரசின் அச்சாணியாம் அரசு ஊழியர்களுக்கு செய்ய வேண்டிய பொருளாதார கடமைகளை, தவறாக பிரச்சாரம் செய்யும் முதல்வரின் பொய்ப்*

பிரச்சாரத்தை தோலுரித்துக் காட்டும் நேரம் வந்துவிட்டது.

ஒரு மாநில அரசாங்கத்தின் வருவாய் என்பது வரி வருவாய் மட்டுமல்ல. தற்போது வந்துள்ள ஜிஎஸ்டி-க்கு பிறகு, தமிழக அரசின் வரி வருவாய், மாநிலத்தின் மொத்த ஆண்டு வருவாயில் 35% மட்டுமே என பல பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். மற்றபடி நம் மாநிலத்திற்கு தேவையான மீதி 64% வருவாய் எப்படி வருகிறது? மத்திய அரசு தரும் பல்வேறு வகையிலான திட்டங்கள் மூலம் மானியங்கள், நிதிக் குழுக்களின் ஒதுக்கீடு, மத்திய திட்டங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் நீண்ட கால கடன் மூலம்தான் வருகிறது. அப்படிப் பார்த்தால் 36% வரி வருவாயில், அரசு சொல்கிற மாதிரியே 61% அரசு ஊழியர்களுக்கு செலவாகிறது என எடுத்துக் கொண்டால்கூட, மொத்த வருவாயில் 21% (அதாவது 5-ல் 1 பங்கு) தான் அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்படுகிறது.

இதில் லட்சக்கணக்கில் சம்பளமும், படியும், ஓய்வூதியமும் வாங்கும் முதலமைச்சர், அமைச்சர்கள், ஐஏஎஸ், ஐபிஎஸ், எம்.எல்.ஏ.க்களுக்கான ஊதியமும் சேர்த்துதான் செலவாகிறது.

பொதுமக்கள் நலனுக்கான திட்டங்கள் செயலாக்கம், சட்டம் மற்றும் ஒழுங்கு, விவசாயம், கல்வி, மருத்துவ வசதி, வரி வசூல் என அனைத்தையும் அரசு ஊழியர்களுக்கு 5-ல் 1 பங்கு கூட செலவிடவில்லை. இன்னும் சொல்லப் போனால் பல துறை ஊதியங்கள் மத்திய நிதி செலவினங்களின் மூலம்தான் செய்யப்படுகிறது. அப்படிப் பார்த்தால் 21%லும் பாதிக்கு மேல் மத்திய அரசின் மானியங்களால் ஈடுகட்டப்படுகிறது.

குறிப்பாக, உள்ளாட்சித் துறையில் 50% ஊழியர்களின் ஊதியம் மத்திய அரசின் பல திட்டங்களிலிருந்து ஈடுகட்டப்படுகிறது. கல்வித் துறையில் 40% சம்பளம், சுகாதாரத் துறையில், வேளாண்மைத் துறையில் மத்திய தொகுப்பு நிதியிலிருந்து பெருவாரியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இவ்வாறு இருக்கையில், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மீது ஏன் இதுபோன்று முதல்வர் அவதூறு பிரச்சாரத்தை செய்கிறார் எனத் தெரியவில்லை. அரசு ஊழியர்களுக்கு வழங்கும் ஊதியம், அரசின் கடமை மட்டுமல்ல, மாறாக அது சேவைக்கு செலுத்தும் அரசின் பங்களிப்பாகும். எம்.எல்.ஏ.க்களுக்கும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் காட்டும் பரிவுதான் அரசின் கஜானாவை காலி செய்கிறது.

முதல்வரின் இதுபோன்ற அவதூறு பிரச்சாரம் மக்கள் மத்தியில் எடுபடாது. நமது நியாயமான கோரிக்கைகளான புதிய பென்சன் ரத்து, சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் ரத்து, ஊதிய முரண்பாடுகள் களைதல், நியாயமாக வழங்க வேண்டிய ஊதியத் தொகை வழங்க வேண்டியது அரசின் கடமை. மறுக்கும்போது போராட்டங்கள் தவிர்க்க இயலாது. மே 8 முற்றுகைப் போராட்டத்தை தவிர்க்கவே மக்களிடம் திசை திருப்பும் நோக்கத்தில் முதல்வர் பேசியுள்ளார்.




இப்படி பேசிய முதல்வர்களும், அரசும் காணாமல் போயுள்ளன. இனியும் மாற்றிக் கொள்ளவில்லையெனில் "பகை முடிக்கும் பணியை" அரசு ஊழியர் சங்கம் மீண்டும் துவக்கும் ஸ்தாபன கடமையை நிறைவேற்றும் என்று அரசுக்கு எச்சரிக்க தயாராவோம். ❖

35ஆம் ஆண்டு சங்க அமைப்பு தினம்

# தேவையில்லாத் துயரங்களை முடிவுக்கு கொண்டுவரும் துவக்கமாக இந்த அமைப்பு தினம் இருக்கட்டும்!

அன்பார்ந்த தோழர்களே!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அமைக்கப்பட்டு 34 ஆண்டுகள் முடிந்துள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உருவான மே 6ஆம் நாளை ஒவ்வொரு ஆண்டும் நாம் அமைப்பு தினமாக அனுசரிக்கிறோம். அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பல உரிமைகளை சில பேர் தங்கள் சுயநலங்களுக்காக சமரசம் செய்து கொண்டதன் விளைவாக உருவானது தான் இந்த இயக்கம். ஊழியர்கள் உரிமைகள் எதுவாயினும் அதை சமரசம் செய்துகொண்டு சகித்துப் போகாமல் போராடிப் பெற வேண்டும் என்கிற நோக்குடனும், உரிமைகளை பெறும்வரையில் சமரசமில்லா போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற லட்சிய வேட்கையுடனும் தொடங்கப்பட்டதுதான் இந்த இயக்கம்.

என்ன லட்சிய நோக்குடன் இந்த இயக்கம் துவங்கப்பட்டதோ இந்த 34 ஆண்டுகளும் அந்த லட்சியத்திற்காக, சமரசம் செய்து கொள்ளாமல், தொடர்ந்து ஊழியர்கள் உரிமைக்காக போராடி வருகிறது நமது சங்கம். அரசு ஊழியர்கள் மீதான உரிமைகள் மீது எந்த ஒரு அரசாங்கமும் ஏனோ தானோவென்று முடிவெடுத்துவிட முடியாதாபடி ஊழியர்களை காப்பதும் அவர்தம் உரிமைகளை கேட்பதும் போராட்டங்களை முன்னெடுத்து அதிகார வர்க்கத்துக்கு எதிராக வாதாடுவதுமான நடவடிக்கை களில் மற்ற இயக்கங்களை விட முன்னோடி இயக்கமாக நம் இயக்கம் விளங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை புறந்தள்ளிவிட்டு எந்த ஒரு அரசாங்கமும் ஊழியர்கள் மீதான உரிமைகள் மீது கைவைத்து விடவோ அல்லது கைவிரித்து விடவோ முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் பாதுகாப்பு கவசமாக, அரணாக இன்று ஒரு பெரும் இயக்கமாக இச்சங்கம் விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் நம்முடைய ஆசான் தோழர் எம்.ஆர். அப்பனும் அவர் வழிபற்றிய ஆளுமைத் தோழர்களின் அர்ப்பணிப்பு செயல் பாடுகளும் தொடர்ந்து நடத்திய போராட் டங்களும் விட்டுக் கொடுக்காத உரிமை களும்தான்.



ஒரு இயக்கம் அல்லது அமைப்பு என்பது எப்படி இருக்க வேண்டும்? அது அதனுடைய ஒவ்வொரு உறுப்பினர்களிடத்திலும் உயிர் மூச்சாக இருக்க வேண்டும். அவ்வப்போது ஊழியர்கள் இதயத் துக்குள் ஒரு கவிதையைப்போல் மணம் பரப்ப வேண்டும், ஒவ்வொரு உரிமை மீட்புக்குப் பின்னும் எல்லா நெருக்கடிகளையும் தாண்டி கைப்பிடித்த காதலியின் பெருமூச்சின் அரவணைப்பையொத்த பேருவகை தரவேண்டும். மீண்டும் அடுத்த கட்ட போராட்டத்துக்கான ஆயத்தங்களுடன் காத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் நம் மனதில் அசாதாரண மான புதிய படிமங்களையும் கருத்துக்களையும் விதைக்க வேண்டும். நம்மைச்சுற்றி நிகழும் குழப்பம் நிறைந்த வருத்தமளிக்கக்கூடிய, பரவசமான மாற்றங் களின் உண்மைக் காரணங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளும் வகையில் அது நம் கண்களைத் திறக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் விட பெரும் மக்கள்திரள் அனுபவித்துக் கொண்டிருக்கும் தேவையில்லாத துயரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் எதிர்காலம் ஒன்றின் முகவர்களாக மாற அது நம்மைத் தூண்ட வேண்டும். தான் கொண்டிருக்கும் உண்மையான விடுதலைக்கான, உரிமை மீட்புக்கான சாத்தியத்தை அனைவரும் உணர்வதற்கான உந்துதலை அது தர வேண்டும்.

நம்முடைய ஸ்தாபனம் இதையெல்லாம் ஊழியர்கள் மத்தியில் விதைத்துள்ளதா? சிந்த னையைத் தூண்டி யுள்ளதா? சாதித் துள்ளதா? என்பதை இந்த அமைப்பின்



செயல்பாடுகளிலிருந்தும், இந்த செயல்பாடுகளில் ஊழியர்களின் பங்களிப்பிலிருந்தும் அவரவர் செயல்பாடுகளுக்கேற்ப உணர்ந்து கொள்ளலாம்.

நம்முடைய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழகத்தில் 2017 ஜனவரியில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டம் தொடங்கி தொடர்ந்து பல போராட் டங்களை முன்னெடுத்து முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஏகப்பட்ட போராட்டங்களை அது அரசு ஊழியர்களுக்காக இருந்தாலும் சரி, பொதுமக்கள். மாணவர்கள், விவசாயிகள், பெண்கள், மாநில உரிமைகள் என பொதுநலன் சார்ந்த விஷயங்களிலும் பல்வேறு களங்களிலும் தன் பங்களிப்பைச் செய்து வந்திருக்கிறது.

ஒரு புறம் ஸ்திரமற்ற தமிழகத்தின் அரசியல் சூழ்நிலையில் செயல்படாத அரசாங்கத்தின் செயல்பாடுகளை எதிர்த்து போராட்டங்கள் நடத்தி வந்தாலும் ஊதிய மாற்றம் தொடர்பான நம்முடைய போராட்டங்களையும் இடைவிடாமல் நாம் நடத்தி வந்திருக்கிறோம். ஜாக்டோ-ஜியோ அமைப்பு வலுப்பெற்ற பின்னர், ஆட்சியாளர்கள் மத்தியில் ஒரு அசைவை ஏற்படுத்த நாம் பல போராட்ட உத்திகளை வகுத்து களம் கண்டதால்தான் 21 மாத கால தாமதத்திற்குப் பிறகாவது ஊதிய மாற்றத்தைப் பெற முடிந்தது. ஜாக்டோ-ஜியோ அமைப்பை வழிநடத்தி நாம் முன்னெடுத்த போராட்டங்கள் என்ற அங்குசம் இல்லாமல் தூங்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்தை நாம் தட்டி எழுப்பாமல் இருக்க முடியாது.

இனிமேல் சில அத்தியாவசியப் பணிகளை தவிர்த்து அனைத்து அரசுப் பணிகளையும் அவுட் சோர்சிங் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணிகளாக மாற்ற அரசு முனைந்துவிட்டது என்பதற் கான அபாயச் சங்காக அரசாணை எண்.56 வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இருக்கின்ற அரசுத் துறைகளை தனியார்மயமாக்கும் அரசின் நரித்தனமும் அரசு வேலைகளை அத்துக்கூலி, அவுட்சோர்சிங் மற்றும் ஒப்பந்த வேலைகளாக மாற்றும் நயவஞ்சக வலையும் விரிக்கப்பட்டுள்ளது. அரசுப் பணி மக்கள் பணி என்பதை மறந்து இந்த அரசாங்கம் மக்கள் நலன்களுக்கு பக்கபலமாக இருந்துவரும் அரசு ஊழியர்களை விட்டுவிட்டு அந்தப் பணியிடங்களை ஒப்பந்தப் பணியிடங்களாக மாற்றினால் மக்கள் நலன் பாதிக்கப்படும் என்பது தெரிந்தும் அரசாங்கம் இந்த அரசாணையை வெளி யிட்டுள்ளது மக்கள் மீது அதற்குள்ள அக்கறை யின்மையையும் அரசு ஊழியர்கள் மீது அது கொண் டுள்ள நம்பிக்கையின்மையையும் காட்டுகிறது. இதை நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. இதற்கான போராட்டக் களத்தை வடிவமைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

21 மாத ஊதிய மாற்ற நிலுவைத்தொகையை நிறுத்திக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஊதிய மாற்றம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. வழக்கம்போல் ஒருநபர் குழுவை அமைத்து எப்போதும் போல் அரசாங்கம் செய்துகொண்டிருக்கும் பித்தலாட்ட நாடகங்களை நாம் உன்னிப்பாகவே கவனித்து வருகிறோம். ஒரு நபர் குழுவிடம் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள ஏற்ற இறக்கங்கள் மற்றும் ஊதிய மாற்றியமைப்பு குறைபாடுகள் பற்றியும் மற்றும் என்னென்ன முறையீடுகளை சங்கங்கள் முன் வைக்கலாம் என்று அரசாணை எண்.57 நிதி (சம்பளப் பிரிவு)-ல் குறிப்பிட்டுள்ள அம்சங்களில் ஊதிய மாற்றியமைப்பு குறைபாடுகளை தவிர்த்த குறைபாடு களை சங்கங்கள் கேட்கலாம் என இப்போது, திருத்தி யமைக்கப்பட்ட ஒரு அரசாணையை அரசாணை எண்.138 (சம்பளப் பிரிவு) வெளியிட்டு இன்னொரு உரிமைபறிப்பு நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது இவ்வரசு.

ஊதிய மாற்றத்தைவிட முக்கியமானதொரு பிரச்னை புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய நாம் நடத்தி வரும் தொடர் போராட்டங்கள். புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப பெறுவதற்கான ஆக்கக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்க அமைக்கப்பட்ட குழுக்களின் காலவரை இதுவரை 11 முறைக்கும் மேலாக நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதும் அரசு அதுகுறித்து பாராமுகமாக உள்ளதும் ஊழியர்கள் எரிமலையாக வெடிக்கும் நிலையை ஏற்படுத்தி யுள்ளது. மே 8ம் தேதி அதற்கான ஒரு பெரும் போராட்டத்துக்காக கோட்டையை முற்றுகையிடும் போராட்டம் அறிவிக்கப்பட்டு அதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதுபோன்று நாளொரு பிரச்சனைகளின் அடிப்படையில் பொழுதொரு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியங்கள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக ஏற்பட்டிருக்கிறது. இதனால், கடந்த இரண்டு ஆண்டுகால சங்க நடவடிக்கைககளை கண்ணுற்றால் அவை பெரும் பாலும் போராட்டங்கள் நிறைந்த பாதையாகவே தெரிகிறது.

இத்தகைய போராட்டங்களுக்கு மத்தியில் நமது சங்கம், அகில இந்திய மாநாடு ஒன்றையும் பொறுப் பேற்று சிறப்போடு நடத்தி முடித்திருக்கிறது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆம்

தேசிய மாநாட்டை நாம் நடத்திக் கொடுக்க வேண்டும் என்ற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பல்வேறு சிரமங்களுக்கிடையில் நடத்தி முடித்திருக்கிறோம். இதனால் நமது இயக்கத்தின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் என அனைவரும் கடந்த மூன்று மாதங்களாக காலில் சக்கரம் கட்டிக்கொண்டு மாநாட்டு வேலைகளுக்காக பறந்து கொண்டிருந்தனர். இடைவிடாத பல போராட்டங்களுக்கு மத்தியில் இந்த தேசிய மாநாடு பல தீர்வுகளுக்கான ஜன்னல்களை திறந்துள்ளது. தமிழகத்தில் செயல்படும் ஜாக்டோ-ஜியோ அமைப்பைப் போல் அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஆசிரியர் மற்றும் பொதுத் துறை ஊழியர் களுடன் கூட்டமைப்பை ஏற்படுத்தி இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து அரசுத் துறை பொதுத்துறை ஊழியர்களை ஒன்றிணைத்து மாபெரும் சக்தியாக திரட்டி உரிமைகளை மீட்டெடுக்க வழிகாணப்பட்டுள்ளது. இந்த தேசிய மாநாட்டின் காரணமாகவும் ஸ்தாபனக் கடமைகள் கொஞ்சம் பின்னுக்குத் தள்ளப்பட்டனவே ஒழிய அவை விட்டு விடப்படவில்லை. அதை நினைவில் கொள்ளவும் கடமையை தொடரவும் இந்த அமைப்பு தினம் இன்றியமையாதது.

ஒரு சங்கம் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதார பிரச்னைகளுக்காக போராட்டங்களை முன்னெடுத்து வரும் அதே வேளையில் தன்னுடைய ஸ்தாபன நடவடிக்கைகளையும் மறந்து விடலாகாது. ஆனால் 2016-2017ஆம் ஆண்டுகளில் பெருமள விலான போராட்டங்கள் காரணமாக ஸ்தாபன நடவடிக்கைகளில் கொஞ்சம் தொய்வை சந்தித் திருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. நம்முடைய ஸ்தாபன நடவடிக்கைகளான உறுப்பினர் சந்தா புதுப்பித்தல், புதிய உறுப்பினர் சேர்க்கை, அரசு ஊழியர் இதழுக்கு சந்தா புதுப்பித்தல், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தல் போன்றவற்றை நடத்தி ஸ்தாபனத்தை வலுவுள்ளதாக வைத்துக் கொள்வதும், பயிற்சிப் பட்டறைகள், திறனாய்வுக் கூட்டங்கள் கருத்தரங்குகள், கண் தான, இரத்த தான முகாம்கள் போன்றவற்றை போதுமான அளவுக்கு நடத்தி ஊழியர்களின் உணர்வு மட்டத்தை சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரத் தளங்களில் முன்னெடுத்துச் செல்வதுமான நடவடிக்கைகள் தொடர்ந்து நடை பெறும். இவற்றில் கொஞ்சம் சுணக்கம் ஏற்பட்டுப் போனதற்கு காரணம் எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு நாம் ஏராளமான போராட்டக் களங்களில் நின்றதுதான்.

ஒரு ஸ்தாபனம் துடிப்புடனும் கம்பீரத்துடனும் வலிமையுடனும் திகழ வேண்டும் என்றால் அதற்கு மேற்கூறிய நடவடிக்கைகள் மிகவும் அவசியமான தாகும். மேற்கண்ட ஸ்தாபன நடவடிக்கைகள் மூலம் திரட்டப்படும் வலிமையை ஒட்டுமொத்த சமூகத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தி வந்திருக்கிறோம்.

கடந்த காலங்களில் மாவட்டந்தோறும் இரத்த தானம், கண் தானம், உடலுறுப்பு தானம், மருத்துவ முகாம், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு உணவு உடை வழங்குதல், 10ஆம் வகுப்பு 12ஆம் வகுப்புகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்கி ஊக்குவித்தல், மரக்கன்றுகள் நடுதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கூட்டங்கள் போன்றவற்றை நடத்தி யுள்ளோம். நமக்கிருக்கும் பல்வேறு கடமைகளில் இந்தக் கடமைகள் நாம் மக்களோடு இருக்கிறோம், மக்களுடனே பயணிக்கிறோம் என்பதை இந்த சமுதாயத்திற்கு உணர்த்தக்கூடியதுமாகும். அப்போது தான் மக்களும் அரசு ஊழியர்களின் நியாயமான பிரச்னைகளுக்கு முன் நிற்பார்கள்.

ஆட்சியாளர்கள் மக்களையும், ஊழியர்களையும் தங்களுடைய அதிகாரத்தின் மூலமாகவும் அடக்கு முறைகள் வாயிலாகவும் ஒடுக்கப்பார்க்கும் நடவடிக்கைகள் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் காலங்களி லிருந்து தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. “ஆட்சியாளர்கள் செய்யும் முட்டாள்தனத்தை நாம் தனிநபர்களாக முடிவுக்கு கொண்டுவர முடியாது. ஏனெனில் இந்த முட்டாள்தனத்துக்கு மாற்று மருந்தை உற்பத்தி செய்யும் எந்தச் சந்தையும் ஒருபோதும் உருவாகப் போவதில்லை. கூட்டான, ஜனநாயக அரசியல் செயல்பாடுதான் சுதந்திரத்திற் கும் மகிழ்ச்சிக்கும் நமக்கு இருக்கும் ஒரே ஒரு வாய்ப்பு'' என்று மார்க்ஸும், ஏங்கெல்ஸும் சொன்ன வார்த்தைகளை நினைவில் கொண்டு அந்த சுதந்திரத்தை அடைய மக்களோடு பயணிப்போம்.

அதை உறுதிப்படுத்தவும், உந்துதல் ஏற்படுத்து வதற்கான ஒரு நாளாகவும் நாம் இந்த அமைப்பு தினத்தைக் கொண்டாடுவோம். எனவே இந்த அமைப்பு தினத்தில் நாம் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கான உரிமைகளுக்காக மட்டும் அல்லாமல், மக்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருவதற்காகவும் நம்முடைய ஸ்தாபனத்தை வலிமைப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்வோம்.

எனவே, மேற்கூறிய ஸ்தாபன நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் முனைப்புடன் ஈடுபட்டு ஸ்தாபனத்தை முன்னெடுத்துச் செல்ல இந்த அமைப்பு தினத்தில் உறுதி ஏற்போம். ❖

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

16ஆம் தேசிய மாநாடு

2018 ஏப்ரல் 5-8 சென்னை - வரவேற்புக் குழு

# புஜங்களில் புதுத் திணவு! புலன்களில் புதுப் பொலிவு! நெஞ்சம் நிறைந்தது - இது உன்னால் நிகழ்ந்தது!

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், 16வது தேசிய மாநாட்டை தமிழகத்தில் நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திடம் பொறுப்பை கொடுத்தபோது இதை எப்படி நாம் செய்து முடிக்கப் போகிறோம் என்ற மலைப்புதான் நம் முன்பு இருந்தது.

எந்த தேதியில் நடத்துவது? எத்தனை நாட்கள் நடத்துவது? எப்படி நடத்துவது? இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வரும் சம்மேளனத்தின் நிர்வாகிகளை, தொழிற்சங்க தலைவர்களை, மாநாட்டு பிரதிநிதிகளை, சர்வதேச பார்வையாளர்களை, நம் தேச பத்திரிகையாளர்களை, மக்கள் பிரதிநிதிகளை, காட்சி ஊடகவியலாளர்களை, வரவேற்பதும், விருந்தோம்பல் செய்வதும், தங்குவதற்கான வசதிகள் செய்வதும், மாநாடு முடிந்ததும் அவர்கள் ஊர் திரும்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதும்.... அப்பப்பா எப்படித்தான் செய்யப் போகிறோமோ என்கிற மலைப்பு பதட்டத்தை உண்டு பண்ணிய போதும், எப்போதும் போல் நமது அமைப்புக்கே உரிய ‘எதையும் சவாலாக ஏற்றுக்கொள்வது’ என்ற இயல்பின் அடிப்படையில் நாம் அதை ஏற்றுக்கொண்டோம்.

மாநாடுக்கு மண்டபம் பார்க்க வேண்டும், மாநாடு நடத்த நிதி திரட்ட வேண்டும், தோழமை சங்கங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும், அவர்கள் பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற செயல் திட்டங்களும் அணிவகுத்து நின்றன. எல்லாவற்றையும் யோசித்துக் கொண்டே இருந்தால் எதுவும் நடக்காது. உடனடியாக செயலில் இறங்க வேண்டும் என்று முடிவெடுத்து வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. வரவேற்புக் குழுவில் ஒவ்வொரு உறுப்பினரும் தீப்பொறியாக இருந்து, சிறப்புடன் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை அது அமைந்த விதத்திலேயே தெரிந்தது. 2003-ல் ஒரே அரசாணையில் 1,86,000 பேரை பணி நீக்கம் செய்த தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அரசாணையை திரும்பப் பெறப் போராடியவரும், அரசு ஊழியர்களுக்காக பாராளுமன்றத்தில் எப்போதும் குரல் கொடுப்பவருமான தோழர் டி.கே.ரங்கராஜன் அவர்கள் வரவேற்புக் குழுவின் தலைவராக பொறுப்பை ஏற்றுக்கொண்டதுமே மாநாட்டுக்கு ஒரு கம்பீரம் வந்துவிட்டது. முதல் வேலையாக மாநாட்டு இலச்சினை வடிவமைக்கப்பட்டது. மாநாட்டு இலச்சினையை வரவேற்புக் குழு அறிமுகப்படுத்தி அது அனைத்து மாவட்ட நிர்வாகிகள் கைகளில் கிடைத்ததுமே மாநாட்டு வேலைகள் றெக்கை கட்டி பறக்க ஆரம்பித்தன. மாநாட்டு இலச்சினை எல்லோரையும் கவர்ந்திழுக்க மாவட்டந்தோறும் போஸ்டர்கள், பதாகைகள், நிதியளிப்புகள் என மாநாட்டுப் பணிகள் வேகமெடுக்க ஆரம்பித்தன.

கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களுமே அவரவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்புகளை... கூட்டங்களை நடத்துவது, நிதி சேகரிப்பது என ஆர்வத்துடன் மேற்கொண்டனர். பேஸ் புக், வாட்ஸ்-அப் போன்ற சமூக வலைத்தளங்களிலும் மாநாட்டு பிரச்சாரம் களை கட்டியது.

ஏதோ அரசு ஊழியர் சங்கம் கேட்கிறது, பேருக்கு ஏதாவது செய்துவிட்டு போவோம் என்றில்லாமல் பொறுப்பிலிருக்கும் நிர்வாகிகளும், தோழமைச் சங்க ஆளுமைகளும், சங்கத்தின் சாதாரண உறுப்பினர்கள் பல பேரும் இந்த மாநாட்டு பணிகளை தங்கள் வீட்டு விழாவைப் போல் தலைமேல் தாங்கி வரவேற்புக்குழு நிர்வாகிகள் அனைவரும் நெகிழத்தக்க வகையில் சுறுசுறுப்புடன் உழைத்தார்கள்.

நாம் பல விழாக்களை நடத்தியிருக்கிறோம், பல மாநாடுகளை கண்டிருக்கிறோம். ஆனால், அந்த மாநாடுகளுக்கு, நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் மணிமகுடம் வைத்ததுபோல் அமைந்தது இந்த மாநாடு என்றால், உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. தேசிய மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியில் முதல் நிகழ்ச்சியாக, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன மாநாட்டு வரலாற்றில் இதுவரை இல்லாத நிகழ்வாக மட்டுமில்லாமல் நெகிழ்வாகவும் அமைந்தது மறைந்த மாபெரும் தலைவர்களின் நினைவு ஜோதிகளை மூன்று முனைகளிலிருந்து ஏந்தி வந்து மாநாட்டு மண்டபத்தில் சேர்த்த நம் தோழர்களின் நினைவு ஜோதி ஓட்டம். கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தோழர் சுகுமால்சென் அவர்களின் நினைவு ஜோதியும், நாகப்பட்டினத்திலிருந்து தோழர் எம்.ஆர். அப்பன் அவர்களின் நினைவு ஜோதியும், நீலகிரியிலிருந்து தோழர் ஆர். முத்துசுந்தரம் அவர்களின் நினைவு ஜோதியும் மாநாட்டு மண்டப வாயிலில் பெறப்பட்டபோது, ஜோதிகளில் கலந்த தோழர்களின் ஆசியோடு தேசிய மாநாட்டை துவக்கிய உணர்ச்சிமயம் பெருக்கெடுத்தது. நினைவு ஜோதிகள் வந்த வழித்தடங்களில் எல்லாம் நினைவுஜோதியைக் கண்ட அரசு ஊழியர்களிடையே மறைந்த தலைவர்களின் வீரமும் தீரமும் நினைவு கூறப்பட்டதோடு சங்கத்துக்காக சமரசமின்றி உழைத்த அவர்களின் தியாகமும், சீலமும், புரட்சிகர உரையாக பேசப்பட்டு அரசு ஊழியர்களுக்கு சங்க உணர்வும் போராடும் உரிமையும் தூண்டப்பட்டது. மூன்று முனைகளிலிருந்தும் கொண்டு வரப்பட்ட ஜோதி, அரசு ஊழியர்களிடையே போராடும் உணர்வை ஏற்படுத்தியிருப்பது மறைந்த மாபெரும் தலைவர்களுக்கே உரித்தான தனிச்சிறப்பின் அடையாளமாகும்.

பொது மாநாட்டிற்காக கடலோரம் உள்ள வாலாஜா சாலையில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் எந்தவித பந்தாவுமின்றி கலந்து கொண்டு சிறப்பு சேர்த்த கேரள முதல்வர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்களின் எளிமை, தோழமைக்கு பெருமை சேர்த்த நிகழ்வென்றால், முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் என்ற கெத்து இல்லாமல் உயர்ந்தோர், தாழ்ந்தோர் வேற்றுமைகளை வேரறுக்கும் உணர்வோடு நம் முன்னால் பொது மாநாட்டில் வீற்று, நீதியரசர் அரிபரந்தாமன் அவர்கள் கருத்தாற்றியது சமத்துவ சமுதாயத்தை நோக்கிய பயணத்தின் மகத்துவத்தை நிரூபிக்கும் நிகழ்வாகும்.

சொன்ன கடமைக்காக நடத்தப்பட்ட மாநாட்டைப் போல் இல்லாமல், சொந்த மணவிழாவைப் போல் ஒவ்வொரு நிகழ்வையும் திட்டமிட்டதையும், திட்டமிட்டதை நிகழ்த்திக் காட்டியதையும், பொறுப்பை ஏற்றுக்கொண்ட தோழமைகள் ஒவ்வொருவரும் தமிழகத்தில் நடக்கும் இந்த மாநாட்டை வெளி மாநிலத்திலிருந்து வரும் எவரும் எந்தக் குறையும் சொல்லிவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடனும், பொறுப்புடனும் செயல்பட்டதையும் பார்த்து மாநாட்டின் வரவேற்புக் குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆச்சர்யப்பட்டுப் போனோம் என்பதை விட பிரமித்துப் போனோம் என்பதுதான் அர்த்தமுள்ள சொல்லாடலாக இருக்கும்.

மூன்று மாதங்களுக்கு முன்பே திட்டமிட்டு மாநாட்டுக்கு தேவையான காய்கறிகளை உரமிடாமல் உற்பத்தி செய்து தேவையான அளவுக்கு மேலே மாநாட்டு சமையலறையில் கொட்டிக் குவித்த விவசாயத் தோழமைகளே...

சுவைக்கான ரசாயன உப்புகளை சேர்க்காமலேயே அறுசுவை விருந்து படைத்து பசியாற்றுவித்த சமையல் கலைஞர்களே...

பல்வேறு ஊர்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் ஆகாய மார்க்கமாக, ரயில் மூலமாக, பேருந்துகள் வாயிலாக வந்து சேர்ந்த பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கிய ஆளுமைகளை வரவேற்று மாநாட்டு மண்டபத்துக்கு கொண்டு வந்து சேர்த்த வரவேற்பு பிரிவு தோழமைகளே...

மூன்றரை நாட்களும் மண்டபத்தை தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு இராணுவ ஒழுக்கம் காத்த தொண்டர் படை தோழமைகளே...

பொது மாநாட்டுக்கு அணிவகுத்த இளைஞர் படையினரே... மகளிர் தோழமைகளே... தோழமைச் சொந்தங்களே...

மாநாட்டில் பறந்த கொடிகள், பதாகைகள், தோரணங்கள், பேனர்கள் என திரும்பிய திசையெல்லாம் திக்குமுக்காட வைத்த மாநாட்டு அலங்கார கலைஞர்களே...

கண்காட்சி, கலை நிகழ்ச்சி என காண்போரின் கண்களுக்கு விருந்து படைத்து அறிவுக்கு மருந்து கொடுத்த சிந்தனை சிற்பிகளே...

மாநாட்டு அழைப்பிதழ், வேலை அறிக்கை, பொதுச் செயலாளர் அறிக்கை, மாநாட்டு தீர்மானங்கள், படிவங்கள், அடையாள அட்டைகள், குறிப்பேடுகள், மாநாட்டு மலர் போன்றவற்றை இதுவரை நடந்த தேசிய

மாநாடுகளை மிஞ்சும் அளவிற்கு மிக நேர்த்தியாக வடிவமைத்து அச்சிட்டுக் கொடுத்த அச்சுக்கலை தோழமைகளே...

மாநாட்டு மலருக்கு விளம்பரங்கள் தேடித் தந்து வியக்க வைத்த தோழமை தேனீக்களே...

விளம்பரங்கள் கொடுத்து மாநாடு சிறப்பாக நடத்திட உதவிய தனியார் நிறுவனத்தாரே, தோழமைச் சங்கங்களே, அமைப்புகளே...

எல்லோரையும் ஒன்றிணைத்து ஒரு மாநாட்டை சிறப்பாகவும், ஒழுங்கமாகவும், நேர்த்தியாகவும் நடத்திட கடந்த மூன்று மாதங்களாக கண்துஞ்சாமல் பணியாற்றிய வரவேற்புக்குழு நிர்வாகிகளே...

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர்களே... செயல் மறவர்களே... முன்னாள் நிர்வாகிகளே...

ஓய்வு பெற்ற பின்னரும் சங்கத்தின் கொடியை விடாமல் உயர்த்திப் பிடித்திருக்கும் தோழமைகளே...

ஒருவேளை உணவு செலவு, ஒருவேளை தேநீர் செலவு என செலவுகளை போட்டி போட்டு ஏற்றுக்கொண்ட பசியாற்றுவித்த வள்ளல்களே...

கருத்தரங்கில் கலந்து கொண்டு மாநாட்டை மிளிரச் செய்த நட்சத்திர ஆளுமைகளே...

எல்லா செலவுகளையும் கணக்கு போட்டு ஒவ்வொரு காசையும் சிக்கனமாய் செலவிட்ட மாநாட்டு நிதி பொறுப்பாளர்களே...

நினைவில் விடுபட்டுப்போய், எண்ண இடுக்குகளில் மறைந்து நிற்கும் தோழமை சொந்தங்களே...

உங்கள் அனைவராலும் ஊழியர் வர்க்கத்தின் ஒப்பற்ற உரிமைக் கொடி ஓங்கி உயர்த்திப் பிடிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள் காலையில் கதை பேசி, மாலையில் வாயிலில் ஒன்றுகூடி முழக்கமிட்டுவிட்டு வீடு திரும்பும் வெறுங் கூட்டமல்ல, அது உரிமைகளை திண்ணமாக பெறும் வரையில் ஓயாமல் போரிடும் வீரர் பெருங்கூட்டம் என்பதை நடந்து முடிந்த மாநாடு நாட்டுக்கு உணர்த்தியுள்ளது.

களைப்பு, ஓய்வின்மை, உறக்கமின்மை போன்றவை இருந்தபோதிலும் ஒரு பெருஞ்செயலை செய்த பெருமிதம் நம்முடைய புஜங்களில் புதுத் திணவை ஏற்றியுள்ளது. புலன்களில் புதுப்பொலிவை கூட்டியுள்ளது. இந்த மாநாடு புதிய பாதைக்கான ஒளியை பாய்ச்சியுள்ளது. போராடும் வலிமையைக் கூட்டியுள்ளது. இத்தகைய ஆகப்பெருஞ் செயல் செய்த உங்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் நேரில் சந்தித்து பாராட்டுதல்களை, புரட்சிகர வாழ்த்துக்களை உவகையோடும், உரிமையோடும் பரிமாறிக் கொள்ளவே இந்த மாநாட்டு நிறைவு விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்.

தோழர்கள் ஒவ்வொருவரும் 'கமா'க்களை போன்றவர்கள். 'கமா'க்களுக்கு நிறைவு விழா என்ற 'முற்றுப்புள்ளி' எதற்கு என்ற கருத்தாக்கம் எழலாம். இந்த 'கமா'க்களுக்கு மாநாட்டு நிறைவு விழா என்பது களைப்பாறுதல் மட்டுமேயன்றி 'முற்றுப்புள்ளி'யல்ல. இந்த 'கமா'க்கள் பிரச்னைகளுக்கு 'முற்றுப்புள்ளி'களைத் தேடும் கமாண்டோக்கள். மாநாட்டு நிறைவு விழா என்ற இளைப்பாறுதலுக்கு பிறகு ஜாக்டோ-ஜியோ ஏற்பாடு செய்துள்ள **கோட்டை முற்றுகை போராட்டம் மே எட்டாம் தேதி** நம் எதிர் நிற்கிறது. நம்முடைய தோள்களுக்கும், தொண்டைகளுக்கும், புஜங்களுக்கும், புலன்களுக்கும் வைக்கப்பட்டிருக்கும் சவாலாகும் இந்த கோட்டை முற்றுகைப் போராட்டம். இந்த சவாலை தமிழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் எதிர்கொள்ள ஆயத்தமாவோம் தோழமைகளே!

*உயர்த்திப்பிடி சங்கக்கொடிக் கோலை !*
*சுழற்றி வீசு தோழமை கூர்வாளை !*
*புரட்சி செய்ய வந்தது காண் வேளை !*
*உரிமை பெறும்வரை இறுக்கி வை தோளை !*

**-ஜீவன்**

தோழமை வாழ்த்துக்களுடன்,



***(மு.அன்பரசு)***

பொதுச் செயலாளர்



# எட்டுமணி நேர வேலை உரிமையைத் திசையெட்டும் பாதுகாப்போம்

"எங்களைத் தூக்கிலிடுவதன் மூலம் தொழிலாளர் இயக்கத்தை நசுக்கி விடலாம் என்று நீங்கள் நினைத்தால்.. லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்டோரும், துன்பங்களில் உழல்வோரும் விடுதலைக்காக எதிர்பார்த்திருக்கும் இயக்கத்தை நசுக்கி விடலாம் என்று நினைத்தால்..இதுதான் உங்கள் எண்ணம் என்றால், எங்களைத் தூக்கிலிடுங்கள்! இங்கு நீங்கள் ஒரு சிறு தீப்பொறியின் மீது கால் வைக்கிறீர்கள்.. ஆனால் இங்கே.. அங்கே.. உங்களுக்குப் பின்னால்.. முன்னால்.. எங்கும் தீப்பந்தங்கள் ஒளிரும்! இது நீறுபூத்த நெருப்பு.. உலகம் முழுவதும் உழைப்பாளி மக்களுக்கு எதிரான அனைத்தையும் சுட்டுப் பொசுக்கும்! உழைப்பாளி மக்களின் வெற்றி சர்வ நிச்சயமே."

தூக்குமேடையில் மேதினத் தியாகிகள் முழங்கிய முழக்கமிது.

உலகம் முழுவதிலும் உழைப்பாளி மக்களின் உழைப்பு ஒட்டச் சுரண்டப்பட்ட காலமது. குறிப்பாக அமெரிக்காவில் அனலுக்கு அருகில் நின்று கொண்டு 15-17 மணி நேரம் உழைத்தார்கள். படகு ஓட்டுபவர்களுக்கு 15 மணி நேர வேலை. டிராம் ஓட்டுனர்களும் நடத்துனர்களும் காலை, மாலை என இரு பிரிவுகளாகப் பிரித்து மொத்தம் 15-16 மணி நேரம் வேலை பார்த்தார்கள்.

1872ன் குளிர் காலத்தில் பட்டினியால் வாடிய ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் "ரிலீஃப் அண்ட் எய்ட்சு சொசைட்டி" நோக்கி உணவு வாங்கப் பணம் கேட்டுப் பேரணி நடத்தினார்கள். அவர்கள் சிகாகோ நதியின் கீழே செல்லும் சுரங்கப் பாதைக்கு விரட்டியடிக்கப்பட்டார்கள். அங்கு தடியடி நடத்தப்பட்டது. இது சிகாகோ வரலாற்றில் "ரொட்டிக் கலவரம்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

1877 வாக்கில் தொழிலாளர்கள் வீதிகளில் இறங்க முதலாளிகள் அஞ்சி நடுங்கினார்கள். பத்திரிகைகள் மிகைப்படுத்தி எழுதி அச்சத்தை அதிகரித்தன. 1877 வேலைநிறுத்தம் கிழக்கே விர்ஜீனியா மற்றும் பென்சில்வேனியாவில் ஆரம்பித்தது. சிகாகோவில் ஜூலை 23 அன்று வேலைநிறுத்தம் துவங்கியது. தென்மேற்கே சிகாகோ, பர்லிங்டன் மற்றும் குவின்சி ரவுண்ட் ஹவுஸ் பகுதிகளில் 8000 தொழிலாளர்கள் கூடினர். காவல்துறை மூவரைக் கொன்று, ஏழு பேரைக் காயப்படுத்தி, அந்த 8000 பேரையும் கலைத்தது. ஜூலை 26 அன்று சிகாகோவிற்கு மேலும் கூடுதலாக ராணுவத் துருப்புகள் வந்தன. அவையெல்லாம் தொழிலாளர்கள் மீது தாக்குதல் தொடுத்தன. இது 'வயாடக்ட் போர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பர்னிச்சர் தொழிலாளர் சங்கம் ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை பற்றி முதலாளிகளுடன் பேச ஏற்பாடு செய்திருந்தது. இக் கூட்டத்திற்கு மன்றத்திடம் உத்தரவும் வாங்கியிருந்தது. இருந்த போதிலும் காவல்துறையினர் கூட்டத்திற்குள் புகுந்து தடியடி நடத்தினர். தப்ப முயன்ற தொழிலாளிகளைச் சுட்டபோது டெஸ்மன் என்ற தொழிலாளி இறந்தார். அனுமதி பெற்று நடந்த போராட்டம் என்பதால் வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. சிகாகோ

பெரணமல்லூர் சேகரன்

காவல்துறையினரின் தவறைச் சுட்டிக் காட்டி ஒரு டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

1877 ரயில்வே வேலைநிறுத்தம் தொழிலாளர் களுக்கு மூன்று விசயங்களை உணர்த்தியது. ஒன்று நகரத்தின் 'நிறுவனங்களை' எதிர்த்துப் போராட அவர்களுக்கு இன்னும் அதிகமான அரசியல் செயல்பாடுகள் தேவை என்பது. இரண்டாவதாக பெரிய செய்தித்தாள்களை நம்ப முடியாது என்பதால், தம் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்ல, அவர்களுக்கு என்று பத்திரிகைகள் வேண்டும். மூன்றாவதாக தொழிலாளர்கள் பலரும் போலீஸ் தாக்குதலைச் சமாளிக்க தங்களிடம் ஆயுதமேந்திய குழு இருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

1884-85களில் சிகாகோவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோதும் மெக்கார்மிக் கம்பெனி தனது மூலதனமான இரண்டரை மில்லியன் டாலரில் ஆண்டுதோறும் 71 சத லாபம் ஈட்டியது. இதைப் புரிந்து கொண்ட தொழிலாளர்கள் 1884 முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தங்களையும், கதவடைப்புகளையும் செய்து வந்தனர். இது 1886 மே வரை தொடர்ந்தது. 1886 மே 1ல் நாடெங்கிலும் உள்ள 12000 தொழிற்சாலைகளில் இருந்த 3 லட்சத்து 40 ஆயிரம் தொழிலாளர்கள் தங்கள் கருவிகளைக் கீழே போட இயக்கம் துவங்கியது. ஒரு சங்க நகரமாக சிகாகோ நகரின் பலத்தைக் காட்டும் வண்ணம் அங்கு 80000 தொழிலாளர்கள் இருந்தார்கள். போராட்டம் துவங்கும் முன்னரே, சிகாகோவின் 45000 தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை அவர்களுக்கு உறுதி அளிக்கப்பட்டது.

மே 2 ஞாயிறன்று சிறுசிறு ஊர்வலங்கள் நடந்தாலும் மே3 திங்களன்று மெக்கார்மிக் தொழிற்சாலை அருகே ஆகஸ்ட் ஸ்பைஸ் பேசிய கூட்டம், மே 4 செவ்வாயன்று நடந்த ஹேமார்க்கெட் சதுக்கக்கூட்டம் என இரண்டு பெரும் கூட்டங்களும் ஈர்த்தன. 6000 தொழிலாளர்களுக்கு நடுவே ஒரு டிராம் வண்டியின் மீது ஏறி நின்று பேசிய ஆகஸ்ட் ஸ்பைஸின் சுருக்கமான உரைக்குப்பின் ஆல்பர்ட் பார்சன்சின் ஒரு மணிநேரப் பேச்சு முடிந்தது.

காவல்துறையினரின் திடீர் தாக்குதல் துவங்கியது. கூட்டங்களைக் கட்டுப்படுத்த பல மாதங்களாகப் பயிற்சி செய்து வந்த புதிய வகை ராணுவ அணிவகுப்பைக் காவல்துறையினர் பயன்படுத்தினர். வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டது. குண்டு காவல்துறையினரின் நடுவே விழுந்து ஒருவர் இறக்க, பலர் பலத்த காயமடைந்தனர். காவல் துறையினர் கூட்டத்தை நோக்கிச் சுட்டதில் நான்கு பேர் இறந்தனர். பதட்டத்தில் காவல்துறையினர் தமது ஆட்களின் மீதே சுட்டனர். காவல்துறையினர் ஆறு பேர் இறந்தனர். அடுத்த பல வாரங்களுக்கு சிகாகோவிலும், நாட்டின் பல பகுதிகளிலும் பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவை தடை செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு இன மக்களின் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இத்தகைய வன்முறைக்கு 'நைட்ஸ் ஆப் லேபர்' என்ற அமைப்புதான் காரணம் என பழி சுமத்தப்பட்டது. செய்தித்தாள்கள், வர்த்தகர்கள், பின்னர் பொதுமக்கள் என தொழிற்சங்கங்களுக்கு எதிராகத் திரும்பினர். அனைவரும் சட்டம் ஒழுங்கு வேண்டும் என்று கூச்சலிட்டனர். இதன் தொடர்ச்சி யாக எட்டு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டு அதில் நால்வர் 1887 நவம்பர் 11 அன்று தூக்கிலிடப் பட்டனர்.

சிகாகோ நகரின் ஹப்பர்ட் தெரு காவல் நிலையத்திற்கு இடையில் உள்ள சந்தில்.. நடை பாதையில் தூக்குமேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த மேடையின் முன்பாக பார்வையாளர்களாக 200 பேர் கூடியிருந்தனர். அந்த தூக்கு மேடையில் ஆகஸ்ட் ஸ்பைஸ், பிஷர், எங்கேல், பார்சன்ஸ் ஆகிய நால்வரும் எவ்விதக் கவலையுமின்றி தங்களுக்குரிய இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். ஸ்பைசின் கழுத்தில் கயிறு இறுக்கமாக இருந்தது. அது சற்று வசதியாக சரி செய்யப்பட்டவுடன் அவர் புன்னகையுடன் 'நன்றி' என்றார். பின்னர் "இன்று நீங்கள் நெறிக்கும் எங்கள் மௌனம் மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறும் காலம் ஒன்று வரும்." என்றார் ஸ்பைஸ். அவரைத் தொடர்ந்து ஃபிஷரும், எங்கேலும் "இதுதான் எங்கள் வாழ்வின் மகிழ்ச்சி யான தருணம் " என்றனர். கடைசியாக பார்சன்ஸ் "ஓ அமெரிக்கர்களே! நான் பேச அனுமதிக்கப்படு வேனா?..என்னைப் பேச விடுங்கள்! மக்களின் குரல் கேட்கட்டும்" என்றார். அடுத்த சில நிமிடங்களில் அந்த நால்வரும் நின்று கொண்டிருந்த அந்த மேடையின் அடிப்பலகை உருவப்பட்டது. உயிரற்ற அந்த நான்கு உடல்களும் அங்கே தொங்கிக் கொண்டிருந்தன.

நவம்பர் 13 அன்று மில்வாக்கி சாலையில் சிகாகோ நகர் மையம் வழியாக உணர்வுப்பூர்வமான பெருந்திரள் இறுதி ஊர்வலம் சென்று வால்ட் ஹைமில் முடிந்தது.

1889-ஜூலை 14ல் பாரீசில் பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டு விழாவில் சிகாகோ தியாகிகளின் நினைவாக மேதினம் சர்வதேசத் தொழிலாளர் தினமாக ஏற்கப்பட்டது. 1893-ஜூன் 25 அன்று வால்ட்ஹைம் கல்லறையில் தியாகிகள் நினைவுச் சின்னம் திறக்கப்பட்டது.

மேதினத் தியாகிகளின் ஒப்பற்ற தியாகத்தின் விளைவால் பெற்ற எட்டு மணி நேர வேலை உரிமை

உலகமயமாக்கல் கொள்கையின் விளைவால் இந்தியா உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் பறிபோய்க் கொண்டிருக்கிறது. மூலதனத்தின் கோரத் தாண்டவம் தொழிலாளி வர்க்கத்தைச் செக்கிலிட்ட எள்ளாய்ப் பிழிகிறது. அரசுத்துறைகளில், தனியார் நிறுவனங்களில் என எங்கு நோக்கினும் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் மீது பணிச்சுமை கூடுதலாக சுமத்தப்பட்டு உழைப்புச் சுரண்டல் அரங்கேறி வருகிறது. இதனால் எட்டு மணி நேர வேலை கேள்விக் குறியாகிவிட்டது. மேதினத்தைத் தொழிலாளர்கள் இன்பமாகக் கொண்டாட இயலாத நிலையே முதலாளித்துவ நாடுகளில் நிலவுகிறது. மே தினத் தியாகிகளின் நினைவைப் போற்றும் அதே வேளையில் அவர்கள் எதிர்கொண்ட அடக்குமுறை உள்ளிட்ட தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை அரசு எனும் அடக்குமுறைக் கருவி பிரயோகித்த போதிலும் நம் முன்னோர்கள் போராடி, செங்குருதி சிந்தி, இன்னுயிர் நீத்துப் பெற்ற தொழிலாளர்களின் 8 மணி நேர வேலை உள்ளிட்ட உரிமைகளுக்கான வர்க்கப் போரினைத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்ல உறுதி ஏற்போமாக! ❖

# வெற்றி மாநாடு

*பாவலர் க.மீனாட்சிசுந்தரம்*

**நன்றியை மறவாச் சங்கம்**
**நமதர சூழியர் சங்கம்!**
**வென்றிடும் எந்த நாளும்**
**விதைத்திடும் போராட் டத்தால்!**
**குன்றுபோல் வளர்ந்தே வானைக்**
**குடைந்திடும் போர்முழக் கத்தால்!**
**என்றுமே நெஞ்சில் நிற்கும்**
**இறப்பிலாப் பயன்தரும் சங்கம்!**

**அதுதரும் அழைப்பைப் பார்த்தேன்**
**அட்டையில், நம்நெஞ் சில்வாழ்**
**முதுபெருந் தலைவர் 'அப்பன்'**
**'முத்துசுந் தரம்நம்' சொத்து!**
**எதுவரும்? எனஎண் ணாமல்**
**என்றுமே கர்ச்சித் திட்ட**
**புதைபொரு நாம்நம் 'மால்சென்'**
**பொன்னென மிளிரக் கண்டேன்!**

**தேசியத் தலைவர் எல்லாம்**
**தெம்பினை ஊட்டு கின்ற**
**வீசிடும் தென்ற லாக**
**வெற்றியைத் தரும்புற லாக!**
**பேசிடும் வல்லமைப் பெற்றோர்;**
**பெரும்பயன் காண்போம் நாமே!**
**நாசியின் மூச்சாய்க் காத்தே**
**நலம்பலக் குவித்திடு வோமே!**

**பயன்தரும் மாநா டாகப்**
**பண்பமை சுப்பிரமணியன்**
**நயம்நிறை அன்பர சோடு**
**நாட்டினார் வெற்றியை நோக்கி!**
**பயந்தவர் கொண்டார் வீரம்**
**பாய்ந்தவர் வெல்வார் போரில்!**
**நயம்தரம் கோரிக் கைகள்**
**நம்கரம் சேரும் வாழ்வோம்!**

**விருந்தினர்க் கென்றான் வாழ்த்து**
**வியத்தரு பெருந்திர ளார்க்கும்!**
**பொருந்துமவ் வாழ்த்து மேலும்**
**புழுங்கியே பொறாமை கொள்வோர்!**
**திருந்தியே நம்முடன் சேர்ந்தால்**
**திதிக்குமவ் வாழ்த்தன் னார்க்கும்!**
**வருத்திய உழைப்பால் வெற்றி**
**மாநா(டு) இதற்கென் வாழ்த்து!**

❖

# AISGEF மாநாட்டுத் தீர்மானங்கள்

## தொழிலாளர் விரோத கொள்கைகளையும் அது தொடர்பான சட்ட திருத்தங்களையும் கைவிட வேண்டும்

புதியப் பொருளாதாரக் கொள்கையானது வரன்முறையற்ற முதலாளித்துவத்திற்கு அடிகோலியுள்ளது மட்டுமல்லாமல், எஞ்சியுள்ள அரசின் சேவையினை முற்றிலுமாக சிதைக்கிறது. தொழிலாளர் சட்டத் திருத்தம் என்ற பெயரில் தொழிலாளர் நலச் சட்டங்களில் உத்திரவாதப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்ட உரிமைகள் முழுமையாக அழித்தொழிக்கப்படுவதற்கான நடைமுறைகள் துவங்கியுள்ளன. உலகத் தொழிலாளர் அமைப்பின் விதிமுறைக்கு முரணான எதேச்சை அதிகாரத்துடன் மத்திய அரசு மேற்கொள்ளும் சட்டத் திருத்தங்களால் நிரந்தரமான பணியிடங்கள் என்பதில்லாமல் ஒப்பந்த முறையில் பணிநியமனங்களுக்கு வழிவகை செய்கிறது.

## ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று ஆணைய சட்டத்தினைத் ரத்து செய்து, பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைத் திரும்பப் பெற்று, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்துக

புதிய ஓய்வூதியத் திட்டம் என்பது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரானதாகும். புதிய ஓய்வூதியத் திட்டத்தினால் பல மாநிலங்கள் தங்களது நிதி மேலாண்மையினை கட்டுக்குள் வைக்க இயலாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மாதந்தோறும் ஓய்வூதிய நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையானது மாநில அரசுகளுக்கு பெரும் நிதிச் சுமையாக உருவெடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட நிதி பங்குச் சந்தை சூதாட்டத்தில் முதலீடு செய்வதற்கான அனைத்து அடிப்படைப் பணிகளும் துவங்கப்பட்டுள்ளன. இதனால் இத்திட்டத்தில் சேமிக்கப்பட்டுள்ள 1.27 லட்சம் கோடி ரூபாய் மிகப் பேராபத்தில் உள்ளது. இந்நிதி பங்குச் சந்தைக்கு மடைமாற்றம் செய்யப்படுமாயின், அரசு ஊழியர்-ஆசிரியரின் மாதாந்திர சேமிப்புக் தொகையானது ஒட்டு மொத்தமாக காணாமல் போவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளது. எனவே இச்சட்டத்தினை ரத்து செய்து. பழைய ஓய்வூதியத் திட்டத்தினை தொடர வேண்டும்.

## அரசுப் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையிலும் வெளிமுகமை மூலம் நியமனம் செய்வதை கைவிட வேண்டும்

1991ல் இருந்து இந்திய அரசு புதிய பொருளாதாரக் கொள்கையினைக் கடைப்பிடித்து வருவதால், நிரந்தரப் பணியிடங்கள் ஒப்பந்த, தினக்கூலி மற்றும் வெளிமுகமை நியமனம் ஆகியவற்றின் மூலம் நிரப்பப்படும் நிலைமை உருவாகியுள்ளது. இன்றைய நிலையில் மொத்த அரசுப் பணியிடங்களில் மூன்றில்



ஒரு பகுதி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் பணி உத்தரவாதம் ஏதுமின்றி உழைப்புச் சுரண்டலை ஊக்குவிக்கக் கூடிய வகையில் நிரப்பப்பட்டு வருகிறது. இதனால், இந்தியாவிலுள்ள வேலைவாய்ப்பின்றி வாடும் இளைஞர்கள் குறைந்தபட்ச கூலிக்கான உத்தரவாதமும் பணி நிரந்தரத்திற்கான உத்தரவாதமும் இல்லாமல் அதிகப்படியான நேரத்திற்கு பணிசெய்ய கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அரசு இதுபோன்ற நடைமுறைகளைக் கடைபிடிக்கும்போது தனியாரும் குறைந்தபட்ட கூலிச் சட்டங்களை மதிக்காமலும் உலக தொழிலாளர் அமைப்பு உத்தரவாதப்படுத்தியுள்ள உரிமைகளை வழங்காமலும் பணி நியமனம் செய்யக்கூடிய அவல நிலை தொடர்கிறது. எனவே, மத்திய மாநில அரசுகள் அனைத்துப் பணியிடங்களையும் வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய வேண்டும்.

### வருமான வரி உச்சவரம்பினை அறிவியல்பூர்வமாகவும் நியாயமான நடைமுறையிலும் நிர்ணயம் செய்ய வேண்டும்

மத்திய நிதி அமைச்சரை வரவு செலவுக்கு முந்தைய கூட்டத்தில் பல்வேறு தொழிற்சங்கங்கள் சந்தித்து அளித்த 12 கோரிக்கைகளில் முக்கியமான ஒன்றாகிய மாத ஊதியம் பெறுவோருக்கான வருமான வரி உச்சவரம்பினை எட்டு லட்சமாகவும் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஐந்து லட்சமாகவும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. இக்கோரிக்கையானது மத்திய அரசினால் நிராகரிக்கப்பட்டு, வருமான வரி உச்சவரம்பில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. இந்த வருமான வரி விதிப்புக் கொள்கையானது இந்தியாவின் மொத்தச் சொத்து மதிப்பில் 73 விழுக்காடைக் கொண்டுள்ள பெரு முதலாளிகளுக்கு சாதகமாகவும் மாதந்தோறும் ஊதியம் பெறும் உழைக்கும் மக்களுக்கு பாதகமாகவும் அமைந்துள்ளது. இந்திய அரசின் வருமான வரி விதிப்புக் கொள்கையானது அதிக வருமானம் ஈட்டுவோரிடமிருந்து அதிக வரியும் குறைந்த வருமானம் ஈட்டுவோரிடமிருந்து குறைந்த வரியும் விதிக்கக்கூடிய வகையிலான அறிவியல்பூர்வமான மற்றும் நியாயமான வரி விதிப்பு என்பது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ❖

---

**AISGEF தேசிய மாநாட்டில்**
**பங்கேற்று வழங்கிய வாழ்த்துரைகளிலிருந்து...**

## அகவிலைப்படியைக் கணக்கிட அறிவியல்பூர்வமான முறை இல்லை

மத்திய அரசு ஊழியர்களோடு ஒப்பிடும் போது மாநில அரசுஊழியர்களின் சம்பளம் போதுமானதாக இல்லை என்றும் அகவிலைப்படியைக் கணக்கிட அரசு நிர்வாகத்திடம் அறிவியல்பூர்வமான ஏற்பாடுகள் இல்லை. தமிழகத்தின் தலைநகரமாக விளங்கும் சென்னை 400 ஆண்டுகள் பழமையான நகரம் மட்டுமல்ல இந்திய தொழிற்சங்க வரலாற்றில் முதலாவது தொழிற்சங்க இயக்கம் தோன்றிய மாநகரமும் ஆகும். 19வது நூற்றாண்டிலேயே தொழிற்துறை வளர்ச்சியுடன் தொழிற்சங்க இயக்கமும் ஒருசேர வளரத் துவங்கிய நகரமாகும்.

20ஆம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் தொழிலாளர்களின் நிலைமை மிகமோசமாக இருந்த காலகட்டத்தில் போராட்டங்கள் மூலமாகத் தொழிலாளர்கள் தங்களுக்குள் தொழிற்சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். நாட்டில் அமைப்பு ரீதியிலான முதலாவது தொழிற்சங்கமான சென்னை லேபர் யூனியன் (எம்எல்யு) 1918ஆம் ஆண்டு பெரம்பூர்பின்னி ஆலையில் தொடங்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட வீரர் அன்னிபெசண்ட் அம்மையாருடன் இணைந்து போராடிய பி.பி.வாடியா எம்எல்யு-வின் முதலாவது தலைவராக செயல் பட்டார். அன்றைய ஆங்கிலேய அரசின் நிறவெறிக் கொள்கை யும் தொழிலாளர் விரோதப் போக்கும் தொழிற்சங்க இயக்கம் வீறுகொண்ட எழக் காரணமாகும்.



எம்எல்யூவைத் தொடர்ந்து சென்னையில் டிராம், ரயில்வே, அச்சுத் தொழிலாளர்களும் மண்ணெண் ணெய் விநியோகம் செய்த நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களை அமைத்தனர். ரிக்ஷா உரிமையாளர்கள் வாடகையை 4 ஆனாவில் இருந்து ஐந்து அணாவாக உயர்த்தியதைக் கண்டித்து ரிக்ஷா ஓட்டுநர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஜார்ஜ் டவுனில் இருந்த புகழ்பெற்ற மெக்டோவல் அன்ட் கோ சிகரெட் நிறுவனத்தில் பணிபுரிந்த ஒப்பந்த தொழிலாளர் களும் 1919ல் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இப்படிப்பட்ட பாரம்பரிய நகரில்

தான் அரசு ஊழியர்களின் அகில இந்திய மாநாடு நடைபெறுகிறது.

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை தோழர் எம்.ஆர். அப்பன் போன்ற மறைந்த மகத்தான தலைவர்கள் உருவாக்கினர். ஊழியர்களின் நலன்களையும் அவர்களுக்கான பல்வேறு உரிமைகளையும் பாதுகாத்ததில் இந்தச் சங்கத்திற்கு வளமான பாரம்பரியம் இருக்கிறது. இதே போன்றே மாநில அரசு ஊழியர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டபோது ஆந்திர மாநில அரசு ஊழியர் சங்கம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 1960ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் (ஏஐஎஸ்ஜிஇஎப்) தொடங்கப்பட்டது. இதில் ஏ.சிறீராமுலு, அரவிந்த கோஷ், இ.பத்மநாபன், ஆர்.ஜி.கார்னிக், சுகுமால் சென் போன்ற தலைவர்களின் பெரும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். போராட்ட பாரம்பரிய பின்னணியுடன் கொண்ட ஏஐஎஸ்ஜிஇஎஃப் அகில இந்திய மாநாடு சென்னையில் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

## தமிழகத்தில் ஆட்சி நடத்துவது ஆளுநரா? முதல்வரா?

முன்னதாக, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆவது தேசிய மாநாட்டில் நாடு முழுவதிலும் இருந்து 300 பெண்கள் உட்பட 1200 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். வெவ்வேறு மொழிகள் பேசக்கூடியவர்களாக இருந்தாலும் அரசின் தவறுகளை விமர்சிக்கக் கூடிய ஒரே சிந்தனையில் உள்ளவர்கள் பங்கேற்றுள்ளார்கள். பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு தொழிலாளர், ஊழியர்கள் விரோதப் போக்கை கடைப்பிடிக்கிறது. காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்யாமல், பணிகளை ஒப்பந்தம், அவுட்சோர்சிங் முறையில் அறிமுகப்படுத்தி வருவதால் பொது மக்களுக்கு சேவை செய்வதில் குறைபாடு ஏற்படுகின்றன.

நிதி அயோக் ஆலோசனைக்குழு அமைக்காமல் தொழிலாளர் விரோத சட்டங்களை அமல்படுத்துவதால் தொழில் அமைதி கெடுகிறது. இது பொதுமக்களுக்கு தேவையற்ற தொல்லையை ஏற்படுத்துகிறது. அரசு ஊழியர்கள் மக்களுக்கு சேவை செய்ய கடமைபட்டவர்கள். மத்திய அரசின் இதுபோன்ற மோசமான அணுகுமுறையால் பொதுமக்களுக்கு உரிய சேவை வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. பழைய ஓய்வூதிய சட்டத்தை ரத்து செய்து புதிய ஓய்வூதிய சட்டத்தை கொண்டு வருவது தவறான அணுகுமுறையாகும். இதுகுறித்து இபிஎஸ், ஓபிஎஸ் கவலைப்படுவதில்லை. சாமான்ய மக்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாத வர்களாகவே தமிழக ஆட்சியாளர்கள் உள்ளனர்.

- வரவேற்புக் குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் **டி.கே.ரங்கராஜன்**



சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரது நியாயமான போராட் டங்களில் தொழிலாளர்கள் தங்களின் வர்க்கக் கடமை என்ற உணர்வோடு இணைத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய ஒற்றுமை உருவாகக்கூடாது என்ற நோக்கத்துடன் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மதவெறி சக்திகள் தனிமைப்படுத் தப்பட வேண்டும். அவர்களது நோக்கம் மதத்தையோ மதத்தின் மரபுகளையோ காப்பதல்ல. ஒவ்வொரு பிரச்சனையிலும் மத உணர்வுகளைக் கிளப்பிவிட்டு மக்களைப் பிரித்து வைப்பதுதான் அவர்களது நோக்கம். இதை மக்களிடையே எடுத்துச் சொல்லும் கடமையும் தொழிலாளர் இயக்கத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இருக்கிறது. பெண் தொழிலாளர்களுக்கும் ஒட்டு மொத்தத்தில் பெண்களுக்கும் எதிரானத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

அதில், பெரும் தாக்கம் விளைவிக்கக்கூடிய அளவுக்குத் தலையிடுவதில் பின்தங்கிவிட்டோம் என்பதை நேர்மையாக ஒப்புக்கொண்டு, பெண்களின் உரிமைப் போராட்டங்களிலும் தொழிற்சங்க இயக்கம் முன்நிற்க வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தில், 2004க்கு முன் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்குக் கிடைத்த ஆதாயங்கள் அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்குக் கிடைக்காது. அத்துடன், தொழிலாளர்களைத் தனித்தனி அமைப்புகளாகப் பிரிக்கிற ஏற்பாடும் அதில் இருக்கிறது. இளம் ஓய்வூதியத் தொழிலாளர் அமைப்பு என்பது போன்ற பெயர்களில் ஓய்வூதியர்கள் பழையவர்கள் என்றும் புதியவர்கள் என்றும் பிரிக்கப்படுகிறார்கள்.

- சிஐடியு அகில இந்திய துணைத் தலைவர் தோழர் **ஏ.கே.பத்மநாபன்**

# நாசமாக்கப்படும் முன்னுரிமைத் துறை

அரசின் தவறான கொள்கைகளால் முன்னுரிமைத் துறை என்று கருதப்படும் விவசாயம், வனம், மீன் உற்பத்தி, சுரங்கம் உள்ளிட்ட துறைகள் சரிவைக் கண்டுள்ளன. இந்தத் துறைகளுக்கு அரசு ஒதுக்கும் நிதியும் கணிசமாக வெட்டப்பட்டுள்ளதால் சரிவை நோக்கிச் செல்கின்றன. இந்தத் துறைகளில் தான்

நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாளர் எண்ணிக்கையில் சரிபாதிப்பேர் உள்ளனர் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இந்தத் துறையின் பங்கு 58 விழுக்காடாக இருந்த போதிலும் வேலை வாய்ப்புடன் ஒப்பிடும்போது 30 விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளது.கடந்த 20 ஆண்டுகளில் வேளாண் துறை கடும் நெருக்கடியைச் சந்தித்த காரணத்தால் நாடு முழுவதும் 1997 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சுமார் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

நவீனதாராளமய பொருளாதாரக் கொள்கையால் கிராமப்புறப் பொருளாதாரம் முற்றிலும் நாசமாக்கப்பட்டுள்ளது. விவசாய இடுபொருட்களான விதை, உரம், பூச்சிக்கொல்லி மற்றும் கடன் உதவி போன்றவற்றின் மீதான மானியம் வெட்டப்பட்டது. மேலும் சாகுபடிக்கு ஆகும் செலவும் அதிகரித்துவிட்டது. வெளிநாடுகளில் இருந்து வேளாண் பொருட்களை இறக்குமதி செய்ய இருந்ததடைகள் அனைத்தும் விலக்கிக்கொள்ளப் பட்டன. இதனால் வெளிநாட்டு உணவுப் பொருட்கள் தாராளமாக இறக்குமதியாக அனுமதிக்கப்பட்டது. இதன் விளைவு உள்நாட்டு விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை.

மேலும், விவசாயத்திற்கும் அதுசார்ந்த தொழில்களுக்கும் வங்கிகள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் அளித்து வந்த கடன்கள் நிறுத்தப் பட்டதால், வேளாண் உற்பத்திக்கு ஆகும் செலவுகள் அதிகரித்து விவசாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். மறுபுறம் பொதுவிநியோக முறை சீர்குலைக்கப்பட்டு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே ரேசன் என்ற முறை புகுத்தப்பட்டு உணவுப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. குறைந்த விலையில் ரேசன் பொருட்களை வாங்கும் திட்டத்தில் இருந்து கோடிக்கணக்கான ஏழை, எளிய மக்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் மட்டும்தான் கடந்த 30 ஆண்டுகளாக வளர்ச்சி விகிதம் சராசரியாக ஆண்டுக்கு 9 முதல் 10 விழுக்காடாக உள்ளது. நமது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற் பத்தி விகிதம் 6 முதல் 7 விழுக்காடு என்பது வளர்ந்தமுதலாளித்துவ நாடுகளோடு ஒப்பிடும்போது அதிகம் தானே என்று சில வாதிடுகிறார்கள். உண்மையில் வளர்ச்சியும் முன்னேற்றமும் யாருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் பெரும் பகுதி மக்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் என்ன என்பதை ஆராய வேண்டாமா?

கடந்த 30 ஆண்டுகளில் தாராளமயம், தனியார் மயம், உலகமய பொருளாதாரக் கொள்கைகள் சமத்துவமின்மையை ஏற்படுத்தியுள்ளதோடு கல்வி, சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு போன்றவற்றில் இருந்து பெரும் பகுதி மக்களை விலக்கி வைத்தல் எனும் மோசமான விளைவையே ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சனைகளில் இருந்து நாட்டின் பொருளாதாரம் விடுபடவேண்டும் என்றால் வேளாண்மை, ஊரக மேம்பாடு, கல்வி, சுகாதாரம், அடிப்படை கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் அரசு முதலீடு கணிசமாக அதிகரிக்கப்படவேண்டும்.



நாட்டிற்கு வரும் மற்றும் இங்கிருந்து கொண்டுபோகப்படும் நிதி மூலதனத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும். வங்கி, காப்பீடு உள்ளிட்ட நிதித்துறைகளில் பொதுத்துறை நிறுவனங்களே முக்கிய பங்காற்றவேண்டும். இவை அனைத்தும் நடைபெறவேண்டும் என்றால் நாட்டில் அரசியல் மாற்றம் அல்ல தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான அரசு அமைந்தால்தான் சாத்தியம்.

- மாநாட்டில் **பேராசிரியர் வெங்கடேஷ் ஆத்ரேயா** உரையிலிருந்து...



**த**லித் மற்றும் பழங்குடியின பெண்களின் கல்வி மறுக்கப்படுகிறது. இவர்கள் உயர்கல்விக்கு செல்வதும் கடினமாக உள்ளது. பள்ளிக் கல்வி கூட இடை நிறுத்த விகிதம் அதிகரித்துள்ளது. உயர்சாதி பெண்களுக்கும் உயர்கல்வி மறுக்கப்படுகிறது. கல்வி, சுகாதாரம் தனியார்மயமாகி விட்டால் பெண்களுக்கு அது எட்டாக்கனியாகி விடும். சம வேலைக்கு சம ஊதியம் வழங்காமல் பெண்களுக்கு 20 விழுக்காடு ஊதியம் குறைவாகவே வழங்கப்படுகிறது. பெண் உழைப்பை அங்கீகரிக்கப்படாத சூழ்நிலையில் அவர்களுக்கு சங்கம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

- மாநாட்டில் **பேராசிரியர் சந்திரா** உரையிலிருந்து...

அரசு ஊழியர் இதழுக்கு கட்டுரைகளை அனுப்புவோர் ஒவ்வொரு மாதமும் 25ஆம் தேதிக்குள் arasuoozhiyar@gmail.com என்ற இணைய தளத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- **ஆசிரியர் குழு**

## கற்றதும் பெற்றதும்...

ஆங்கிலம் மட்டும்தான் என்னை ஒரு இந்தியனாக வைத்திருக்க முடியும் என பல முறை நான் படித்தது உண்டு. ஆனால், அதனை முழுவதும் உணர்ந்தேன். ஆனாலும், மாநாட்டில் பல்வேறு மொழிகளில் தங்கள் கருத்துக்களை பேச வாய்ப்பு கொடுத்தது என்பது மிகச் சிறப்பு. ஆனால், இந்நிகழ்வின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்கள் சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளலாம்.

பெண்களுக்கென தனி மாநாடு தளமும் வாய்ப்பும் அளித்தது மிகச் சிறப்பான அம்சம். அதேபோல வன்கொடுமைச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும்ம வகையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பு வந்தவுடன் ஏற்பட்ட கலவரத்தில் 10 நபர்கள் இறந்ததை குறிப்பிட்டு நீதிமன்றத் தீர்ப்பு/மத்திய அரசை கண்டித்தது சிறப்பு. ஆனால், பெண்கள் மாநாட்டில் கர்நாடகத்தை சேர்ந்த நமது இயக்க செயல்பாட்டில் கவனக்குறைவாக ஏற்பட்ட சில தவறுகளை சுட்டிக்காட்டியதை ஏற்றுக்கொண்டது சிறப்பு. ஆனால், சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் எவ்வாறு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்த குறைகள் எவ்வாறு களையப்படும் என்ற உத்தர வாதம் ஏதும் தராதது சற்று வருத்தம் அளிக்கின்றது. ஒருவேளை இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை களையப்படும் சூழலில், நான் கவனிக்காமல் இக்கருத்தை எழுதியிருந்தால் மன்னிக்கவும். பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது போன்று. தலித் மக்கள், மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்கள் மற்றும் மொழி, மத வழி சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் பற்றி நமது தளம் விரிவடையலாம் எதிர்காலத்தில்.

மாநாட்டு ஏற்பாட்டை பொறுத்தவரை மிகப் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மிகப் பிரம்மாண்டமான உணவு ஏற்பாடு, மிகத் தரமான உணவு ஏற்பாடுகள், மிகச் சரியான நேரத்தில் வழங்கப்பட்டிருந்தது. மாநாட்டை மேலும் செழுமைபடுத்தியிருந்தது. தங்கும் இடம் தொடங்கி மாநாட்டு மேடை அமைப்பு ஓவியம் மற்றும் இருக்கை ஏற்பாடுகள் வரை அனைத்து ஏற்பாடுகளும் பல மாநாடுகள் ஏற்பாட்டால் கலந்து கொண்டு நிர்வகித்தவர்கள் மேற்கொண்ட அனுபவத்தை பார்க்க முடிந்தது. பல நாள் சிரமம் மேற்கொண்டு இரவு பகல் பார்க்காமல் ஒரு தொடர்ந்த கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இந்த மாநாட்டை மிகச் செழுமையாக நிகழ்த்தி இருக்கின்றது என்று நினைக்கிறேன்.

இதுபோன்ற ஒரு நல்வாய்ப்பினை அனைத்து மாநில மாநாட்டுப் பணியில் இருப்பவர்களுக்கென தனி பயிலரங்கம் நடத்தி தேசிய அளவில் மார்க்சியத்தை பள்ளி குழந்தைகளிடம் எடுத்துச் செல்வதில் என்ன கொள்ளை திட்டம் உள்ளது என விவாதிக்கப்பட்டுள்ளதாக என்று எனக்குத் தெரியவில்லை.

இந்த மாநாட்டுக்கு எழுதிக் கொண்டுள்ள பொருண்மையை பொறுத்தவரை சிபிஎஸ் ஒழிப்பு, காலிப் பணியிடம் நிரப்புதல், காண்ட்ராக்ட் பணியிடம் ஒழிப்பு போன்ற அம்சங்கள் சிறப்பு. இன்றைய காலத் தேவையை ஒட்டி உணர்ந்து எழுப்பப்பட்ட தீர்மானங்கள், இவை நாம் சரியான பாதையில் இருக்கின்றோம் என்பதற்கான உரைகல். மாநாட்டில் கலந்து கொண்ட மாநிலங்கள் எண்ணிக்கை பிரதிநிதித்துவம் போன்றவை வாசிக்கப்பட்டது. ஆனால், இம் மாநாட்டில் கலந்து கொண்ட மாநிலங்கள் பட்டியல் / கலந்து கொண்ட சங்கங்கள் எண்ணிக்கை பட்டியல் போன்றவை அட்டவணைப்படுத்தி ஓர் அறிவிப்பு பலகை ஏற்படுத்தி அவற்றை பார்வைக்கு வைத்திருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும். அறிவிப்பு பலகை யில் அன்றாட அலுவல்கள், அதன் சிறப்புகளை ஆவணப்படுத்தியிருந்தால் மேலும் சிறப்பு கூடி இருக்கும்.

கண்காட்சியை பொறுத்தவரை மிகப் பிரம்மாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டு இருந்தது அவ்வளவு பிரம்மாண்டமான அரங்கம் ஏற்படுத்தி அதனை மாநாட்டு பங்கேற்பாளர்கள் பெரும்பாலும் பயன்படுத்தாமல் விட்டிருந்ததை கவனிக்க முடிந்தது. இது எனக்கு பெரிய வருத்தம் கொடுத்தது. இதனால் எனக்கு கண்காட்சி அரங்கில் 40% இடம் காலியாக விடப்பட்டிருந்ததும் எனக்கு பெரிய உள்ள பார்வை ஏற்படுத்தவில்லை.

மருந்தகம், மருத்துவ ஏற்பாடுகள் அரங்கம் மிகவும் அறையில் பயிற்சி பெற்றவர்களை 4 நாட்கள் ஏற்பாடு செய்திருந்தது மிகச் சிறப்பு. இத்துடன் இரத்த தான முகாம் (அ) விழிப்புணர்வு முகாம் ஏற்படுத்தியிருந்தால் கூடுதல் சிறப்பாக இருந்திருக்கும்.

மாநாட்டு பங்கேற்பாளர்களுக்கு அன்றாடம் பயன்படுத்தும் சோப்பு, எண்ணை, ஷாம்பு, பற்பொடி, சவரப் பொருள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு அங்கம் அமைத்து... பெண்கள் தங்களை அலங்காரம் செய்துகொள்ள பூக்கள் வாங்கி இலவசமாக விநியோகித்தது என்னைப் பொறுத்தவரை

ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருபுறம் பெண்கள் உரிமை போன்றவற்றை பேசிக்கொண்டு இது போன்ற செயல்கள் என்னால் கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நமது மாநில பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் அமைத்தது சிறப்பு. ஒரு வேலை நமது கண்காட்சி அரங்கில் நமது தொழிற்சங்க செயல்பாடுகள் மட்டும் இன்றி நமது பண்பாட்டை, கலை போன்றவற்றை விரிக்கும் அம்சங்கள் இடம் பெற்றிருந்தால் அனைவரும் கண்காட்சி அரங்கை பயன்படுத்தி இருக்கக் கூடும் என்று நினைக்கின்றேன்.

இரவில் சரியான நேரத்தில் அனைவருக்கும் கண் விழித்திருந்து வகுப்பு எடுத்தது, காலையில் சரியான நேரத்தில் வேலை நேரம் தொடங்கியது சிறப்பு. ஆனால், ஒரு கலை நிகழ்ச்சியை நடத்தியதற்கு பதில் கலை இரவு போன்று நிகழ்த்தி இருந்தால் கூடுதல் கலைத்திறனும் பங்கேற்பும் அதிகரித்து இருக்கும்.

ஒவ்வொரு மாநிலத்தில் இருந்து வரும் பங்கேற்பாளரும், பங்கேற்பாளர் குழு அந்தந்த மாநில சிறப்புகள், அரசு பணியாளர்களின் அறிவிப்பு பலகையினை (அ) கண்காட்சி அரங்கிலோ காட்சிப்படுத்தி இருந்தால் அது ஒட்டுமொத்த சவால்களையும் சாமான்ய பங்கேற்பாளர்கள் தங்கள் இலக்கு பற்றிய ஒரு புரிதல் ஏற்படும் என்று நினைக்கின்றேன்.

- **ல.பச்சியப்பன்**

## நான்பெற்ற அனுபவங்கள்

மிகஅனுபவம் மிக்க மூத்த தோழர்களின் சொற்பொழிவுகளை நேரடியாக கேட்க முடிந்தது மிகுந்த மகிழ்ச்சி. புதிய தோழர்களுடன் சேர்ந்து பங்கேற்றதும், செயல்பட்டதும் மிகுந்த மகிழ்ச்சி. மேலும் மற்ற மாநிலத்தவரின் மொழிகள் புரியவில்லை எனினும் நமது உபசரிப்பினால் பல மாநிலத்தவர் நம்மிடம் வந்து பாராட்டிச் சென்றனர். எங்களுடன் தொண்டாற்றிய தோழர்களும் நாங்களும் ஒற்றுமையுடன் சேர்ந்து பணியாற்றியது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

நான் மகளிர் கருத்தரங்கம் முடிந்து உணவு உண்ணச் சென்றபொழுது நமது தோழர் ஒருவர் தங்களைக் காணவே காத்திருக்கிறேன் என கூறினார். அவர் என்னிடம் உங்கள் குடும்பத்தினர் யாரோ ஒருவர் போராட்ட குணம் கொண்டவர்களாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் காந்தியடிகள் அவர்களின் குடும்பத்திற்கு நாம்தான் வணங்கக் கடமைப்பட்டவர்கள் ஆனால் நமக்கு அவர் குடும்பம் நன்றி சொல்லி வணங்குகிறது என்றால் அது மிகப்பெரிய பாக்கியம். எனவேதான் நீங்கள் அவருக்கு தேநீர் அளித்தபோது அவர் உங்களுக்கு நன்றி கூறியுள்ளார் எனக் கூறினார். அந்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த உங்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

மூன்றாம் நாள்இரவு அங்கே தங்கிய பொழுது பல மாநிலத்தவர் சேர்ந்து தங்கினர். முதலில் எனக்கு தயக்கமாக இருந்தது. ஆனால் அனைத்து மாநிலத்தருவம் எங்களுடன் சேர்ந்து பழகியதைப் பார்த்தபொழுது இன்னும் இரண்டு நாட்களை இழந்து விட்டோமே என வருத்தமாக இருந்தது.

எங்களை வழிநடத்தியர்கள் பிரிவினை பார்க்கிறார்களோ என்ற ஒரு சிறு வருத்தம் இருந்தது. (சில செயல்பாடுகளைக் கொண்டு). முன்திட்டமிடு தலும் இல்லாதது சிறு வருத்தம். மேலும் இம் மாநாட்டினை வென்றெடுக்க ஞானத்தம்பி அவர்கள் பட்ட சிரமங்கள் புரிந்து கொள்ள முடிந்தது.

எல்லாவற்றையும்விட இம்மாநாட்டின் வாயிலாக புதிய தோழர்களுடன் இணைந்து இனிவரும் காலங்களிலும் இச்சங்கத்துடன் இணைந்து செல்ல ஒரு புதிய உத்வேகத்தை இம்மாநாடு தந்துள்ளது என்பதை இத்தருணத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

- **எஸ்.வெண்மதி**

அரசு தகவல் தொகுப்பு விவர மையம்,
சென்னை - 600 025

## மாநாட்டு அனுபவங்கள்

16வது தேசிய மாநாடு பெரும் தீர்மானங்களை கொண்டு முடிவடைந்தது. தீய சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற தீயை எங்கள் மனதில் பற்ற வைத்துவிட்டது. அத்தகைய அற்புதமான நிகழ்வில் பங்கேற்க எங்களுக்கு ஒரு வாய்ப்பினை அளித்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்பினை எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த தோழர் கு.வெங்கடேசன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டில் மண்டபக் குழுவில் இடம் பெற்றதால்தான் என்னால் மேடைப் பேச்சுக்களை யும், அனைத்து மாநில பிரதிநிதிகளின் துணிவுமிக்க பேச்சாற்றலையும் என்னால் கிரகித்துக் கொள்ள முடிந்தது.

மேலும், மண்டபக் குழுவில் இடம் பெற்ற தோழர்கள் அனைவரும் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களாக இருந்ததாலும், எந்த வேறுபாடு மின்றி வேலைகளை பிரித்து முனைப்புடன் செயலாற்றினர். இக்குழு பணியை செய்து முடிக்கும் குழுவாக பாராமல் பல்வேறு விதமான துறைகளின் ஒற்றமை என்னும் சங்ககமாக பார்த்தேன்.

மண்டபக் குழுவின் தலைவராக பொறுப்பேற்று எங்களது பணியை பொறுமையுடன் எடுத்துரைத்த தோழர் ஞானத்தம்பி எனக்கு மிகச்சிறந்த வழிகாட்டியாக என்னால் உணர முடிந்தது.

என்னைப் பொறுத்த அளவில் ஒரு எல்லை இராணுவ வீரன் எவ்வாறு பாதுகாப்பானோ, அவ்வாறுதான் அரங்கினை நான் எனது கண்காணிப்பில் இருந்து சிறிதும் பிறழாமல் பார்த்துக் கொண்டேன்.

மாநாட்டிற்கு வருகை புரிந்த அனைத்து மாநில பிரதிநிதிகளையும் தமிழ்நாட்டின் பாரம்பரியமான உபசரிப்பு என்ற வார்த்தையை மெய்ப்பிக்கும் வகையில் முதலில் தண்ணீர் அருந்தக் கொடுப்பதும், அவர்கள் தாகம் என்று கேட்கும் முன்னரே தண்ணீருடன் அந்த இடத்துக்குச் செல்வதுமாக இருந்தேன்.

தண்ணீர் கொடுப்பது என்பது சாதாரணமான ஒன்றாக இருந்தாலும் அந்த முழு அரங்கிலுள்ள பிரதிநிதிகளுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் தண்ணீர் அளிப்பதைகூட ஒரு வட்ட இயக்கத்தில் நான் மேற்கொண்டேன்.

மேலும், அரங்கினுள் உள்ள பிரதிநிதிகளுடன் உரையாடியபோது அவர்கள் நம்முடைய சிறந்த உபசரிப்பின் மூலம் நெகிழ வைத்துவிட்டதாக அனைத்து மாநில பிரதிநிதிகளும் என்னிடம் கூறினார்கள். குறிப்பாக என்னுடைய சேவை மிகச் சிறந்ததாக இருந்தது என்று என்னிடம் அனைவரும் நட்பு பாராட்டினார்கள். நிர்வாகிகள் அனைவருமே எங்களிடம் மிகச் சிறந்த முறையில் நடந்து கொண்டனர்.

என்னுடன் மண்டபக் குழுவில் இடம்பெற்ற சில தோழர்கள் மட்டும் அவர்கள் என்ன பணிக்காக அங்கு வந்தார்கள் என்பதை மறந்து உட்கார்ந்து அரட்டை அடித்ததும், பணியை விட்டு விலகி நின்றதும் என்னை வெகுவாக பாதித்தது. ஏனென்றால், தொண்டர் படையாக பணி செய்வது என்பது மிகச் சிரத்தையாக மேற்கொள்ள வேண்டிய பணி. அதில் சுணக்கத்துடன் செயல்பட்டால் நாம் சேவை மனப்பான்மையுடன் இல்லை என்பதை கண்ணாடி போல் அனைவருக்கும் காட்டிவிடும் என்பது என்னுடைய கருத்து.

மண்டபக் குழு சிறப்பாக பணியாற்றி இருந்தாலும் என்னுடைய கருத்து இரண்டு மாநிலத்திற்கு ஒரு தொண்டர் என்ற முறையில் அவர்களை நான்கு நாட்களும் அந்த இரண்டு மாநில பிரதிநிதிகளின் தேவைகளை அரங்கினுள் கவனிப்பது என்று பணியை பிரித்து கொடுத்திருக்கலாம். மேலும், அனைவரது கவனமும் மேடையை நோக்கியே இருக்குமென்பதால், மேடைக் குழுவில் உள்ள தொண்டர் மேடையைவிட்டு அகலாது பணி மேற்கொண்டிருக்க வேண்டும். அப்பணி சிறந்த முறையில் இல்லை என்பதும் என்னுடைய கருத்து.

இருந்தாலும் மற்ற தோழர்கள் அனைவரும் எந்த கருத்து வேறுபாடுமின்றி எங்களுடைய பணிகளை பிரித்து மிகச் சிறந்த முறையில் பணியாற்றினோம் என்ற மனநிலையுடன் தான் மாநாடு முடிந்து கிளம்பினோம்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து பிரதிநிதிகளின் எழுச்சிமிகு பேச்சும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வந்த அனைத்து தலைவர்களின் வீரமிகு வசீகரமான பேச்சும் என்னை வெகுவாக கவர்ந்தது.

கேரள முதல்வரின் வருகை இம்மாநாட்டிற்கு முத்தாய்ப்பாக அமைந்தது. அவரின் சீரிய கருத்துக்கள் ஆளும் வர்க்கத்தினருக்கு பெரும் சவுக்கடியாகவும், தொழிலாளர் வர்க்கத்திற்கு பெரும் உந்து சக்தியாக இருந்தது.

இறுதியாக ஒரு சங்கம் என்பது எவ்வாறு செயல்பட வேண்டும், சங்கப் பிரதிநிதிகள் ஒரு சங்கத்தை எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். வேறு மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும், போராட்டம் என்று வந்துவிட்டால் தோள் கொடுக்கும் தோழர்களாக இருப்பதும், அவர்களின் விட்டுக் கொடுக்காத மனோபாவமும், ஒவ்வொருவரின் எழுச்சிமிகு உரையும் என்னை நெகிழ வைத்தது மட்டுமல்லாமல், போராட வேண்டும் என்ற மனப்பான்மையும் எனக்குள் ஏற்பட்டுள்ளது.

எனது சேவையை மற்ற மாநிலத்தவர்கள் பாராட்டியது எனக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக எடுத்துக் கொண்டேன்.

இனி வருங்காலங்களில், எங்களது கோரிக்கைகளை நிறைவேற தீவிரமான போராட்டங்களில் ஈடுபடுவோம். என்னுடன் பணியாற்றும் தலைமைச் செயலக ஊழியர்கள் மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு ஊழியர்களையும் பிரச்சாரம் மூலம் அனைவரையும் போருக்கு தயார்படுத்துவதைப் போல ஒன்றிணைந்து கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்று உறுதியளிக்கிறேன்.


- **ப.அஸ்ரா பர்வீன்**,
உதவி பிரிவு அலுவலர், நிதித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9


*(05.04.2018 முதல் 8.4.2018 வரை ஏஐஎஸ்ஜிஇஎப் மாநாட்டில் ஒரு தொண்டர்களாக பணியாற்றியவர்களின் அனுபவங்கள்)*

# அரசு ஊழியர்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் மக்கள் பணியாற்றுபவர்களாக மாறவேண்டும்




அரசு ஊழியர்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் மக்கள் பணியாற்றுபவர்களாக மாற வேண்டும் என டி.கே.ரங்கராஜன் கூறினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்க 16ஆவது தேசிய மாநாடு வரவேற்புக்குழு நிறைவுக் கூட்டம் சென்னை பெரியமேட்டில் மாநிலத் தலைவர் மு.சுப்பிர மணியன் தலைமையில் 29.4.2018 அன்று நடை பெற்றது. மாநில துணைத் தலைவர் எம்.ஞானத்தம்பி வரவேற்றார். இதில் பங்கேற்று வரவேற்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் **டி.கே.ரங்கராஜன்** பேசியதாவது:

அரசு ஊழியர் மட்டுமல்லாது அனைத்து துறைகளிலும் நாளுக்கு நாள் நெருக்கடி அதிகரித்து வருகிறது. புதிய தாராளமயக் கொள்கையால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்சங்க சட்டங்கள் பல மாற்றப்பட்டு வருகின்றன. முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் சட்டங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன. தற்போதைய தொழிலாளர் நலச் சட்டங்கள் மாறிக் கொண்டே வருவதால் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. ராஜஸ்தான், ஹரியானா போன்ற மாநிலங்களில் தொழிலாளர் நலச்சட்டங்கள் விரைவாக மாற்றப் பட்டு வருகின்றன. அதன்மூலம் அனைத்து பணி களையும் அவுட்சோர்சிங் முறையில் நடைமுறைப் படுத்தும் பணியை அந்த அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

இதையெல்லாம் நாம் ஊழியர்களிடம் விரிவாக பிரச்சாரம் செய்ய வேண்டும். அரசு அறிவிக்கும் கொள்கைகளை அதை அமல்படுத்தும் நீங்கள் அதனால் என்னென்ன பாதிப்பு ஏற்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். அரசின் கொள்கைகள் எப்படி வேலைவாய்ப்பை பறிக்கிறது, எப்படி ஒப்பந்த தொழிலாளர் களை அதிகப்படுத்துகிறது, எப்படி துறை வாரியாக மூடும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்பதை கண்டறிய வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்து உச்சநீதிமன்ற தீர்ப்புகள் அனைத்தையும் படித்து, அதிலுள்ள பாதிப்புகளை ஊழியர்களுக்கு விளக்க வேண்டும். அரசு ஊழியர்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் மக்களுக்கு பணியாற்றுபவர்களாக மாற வேண்டும் என்றார்.

### வலுவான போராட்டங்கள் அவசியம்

அகில இந்திய பொதுச் செயலாளர் **ஸ்ரீகுமார்** பேசுகையில், 16ஆவது தேசிய மாநாட்டிற்கு பிறகு இந்தியாவிலுள்ள பல்வேறு அமைப்புகள் நம்மை தொடர்பு கொண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன எனக் கேட்டனர். புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், அவுட் சோர்சிங் முறையை கைவிட வேண்டும், புதிய வேலை நியமன தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தேசிய அளவில் போராட்டங்கள் நடத்தப்படும் என்றேன். தற்போது

பிஎம்எஸ் மற்றும் ஆர்.எஸ்.எஸ் மூலம்தான் புதிய ஓய்வூதிய திட்டத்தை ஒழிக்க முடியும் என ஆர்.எஸ்.எஸ். கூறுகிறது. இதுதான் இவர்களின் இரட்டை முகம். 2019 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிறுத்தி இந்த முழக்கத்தை இப்போது முன் வைக்கிறார்கள்.

புதிய பொருளாதார கொள்கைகளை அமல்படுத்துவது மட்டுமல்லாமல் புதிய ஓய்வூதிய திட்டத்தையும், அவுட்சோர்சிங் முறையையும் கொண்டு வந்தது பாஜகதான். இதை ஊழியர்களிடமும் மக்களிடமும் அம்பலப்படுத்த வலுவான போராட்டங்களை முன்னெடுப்பது அவசியம். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தில் இணையாத பிற மாநில அரசு ஊழியர் சங்கங்களையும் இணைத்து இந்த கோரிக்கைகளுக்காக அணிதிரட்டி வருகிறோம். வரும் ஜூன் மாதம் முதல் 200 மாதங்கள் நாட்டில் உள்ள ஒவ்வொரு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களை சந்திக்கும் இயக்கங்களை நடத்த உள்ளோம். புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக போராடுவதுதான் இன்று நம்முன் உள்ள முக்கிய பணியாகும். இதை அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றுவோம் என்றார்.

## மே 8 போராட்டத்தை வெற்றிகரமாக்குவோம்

வரவேற்புக் குழு செயலாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளருமான **மு.அன்பரசு** பேசுகையில், இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்தாலும், நம்முன் மிகப் பெரிய கடமை ஒன்று உள்ளது. அது 4 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் மே 8ஆம் தேதி ஜாக்டோ-ஜியோ சார்பில் நடைபெறும் கோட்டை முற்றுகைப் போராட்டத்தை வெற்றிகரமாக்குவது தான். 7 லட்சம் அரசு ஊழியர்களில் 4 லட்சத்து 68 ஆயிரம் பேர் புதிய ஓய்வூதிய திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் குஜராத் மாடலாக தமிழகத்தை மாற்றப் போகிறோம் என்கிறார்கள். அங்கு அனைத்தும் அவுட்சோர்சிங் முறை. எனவே இதற்கெதிரான வலுவான தொடர்ச்சியான போராட்டத்தை முன் எடுக்க வேண்டும் என்றார். இதில் தமிழ்நாடு அரசு அனைத் துறை ஓய்வூதியர் சங்க தலைவர் நெ.இல.சீதரன், முன்னாள் மாநில துணைத் தலைவர் ஆர்.ஜோதி, முன்னாள் பொருளாளர் என்.ஞானகுரு, ரமேஷ் (கணக்கு தணிக்கை அலுவலக ஊழியர் சங்கம்), ஆர்.இளங்கோவன் (டி.ஆர்.இ.யு) ஆகியோரும் பேசினர். பொருளாளர் தங்கராஜ் மாநாட்டு வரவு-செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். இறுதியில் மாநில துணைத் தலைவர் சவுந்தர்ராஜன் நன்றி கூறினார். ❖

## இந்தாண்டு வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும்: வானிலை மையம்

வழக்கத்தைவிட இந்தாண்டு கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று சென்னை வானிலை மையம் கூறியுள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை மைய இயக்குநர் பாலச் சந்திரன் கூறியதாவது:

மே மாதம் முழுவதும் வெப்ப நிலை அதிகமாக காணப்படும். கிழக்குத் தொடர்ச்சி மலையை யொட்டி உள்ள பகுதிகளான வேலூர், திருவண்ணாமலை, சேலம், திண்டுக்கல், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, ஆகிய மாவட்டங்களில் வெப்பச் சலனம் காரணமாக மாலை அல்லது இரவு கோடை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி உள்ள பகுதிகளான கோவை, தேனி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் கோடை மழை பெய்யும். மழை இல்லாத காலங்களில் வெப்பத்தின் தாக்கம் கடுமையாக இருக்கும். அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.கத்திரி, அக்னி நட்சத்திரம் போன்ற சொற்கள் வானிலை தொடர் பான ஆய்வுகளில் இல்லை. கோடை வெயில் என்றே குறிப்பிடுகிறோம். இந்தாண்டு கோடை வெயிலின் தாக்கம் வழக்கத்தைவிட 0.5 முதல் 1 டிகிரி வரை அதிகமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## கோடை காலத்திலிருந்து தப்பிக்க...

இதுபோன்ற கோடைக்காலங்களில் வயதானவர்கள் காலை 11 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை வெளியில் செல்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். வெளியில் செல்லும் ஆண்கள் தலையில் தொப்பிகளையும், பெண்கள் குடைகளையும் பயன்படுத்த வேண்டும்.

இக்கால கட்டத்தில் இளநீர், மோர், பானகம் போன்ற பானங்களையும், வெள்ளரி பிஞ்சு, முலாம் பழம், பப்பாளி பழம் போன்றவற்றை உண்டால் உடலில் ஏற்படும் சூட்டை தவிர்த்து குளிர்ச்சியை உண்டாக்கும். இதன்மூலம் கோடை காலத்திலிருந்து தற்காலிகமாக தங்கள் உடலை பாதுகாத்துக் கொள்ளலாம். குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் வெளியில் செல்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். காலை 11 மணி முதல் 5 மணி வரை கோடையின் வெப்பம் அதிகமாக இருக்கும் என்பதால் இந்த நேரங்களில் இரு சக்கர வாகனங்களை பயன்படுத்துவதை குறைத்துக் கொள்ளவது நல்லது. ❖

# ஜாக்டோ-ஜியோ நிகழ்வுகள்

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்தல், 21 மாத ஊதியக் குழு நிலுவைகளை உடன் வழங்குதல், தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து அனைவருக்கும் ஊதியக் குழுவால் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை தமிழக அரசு கண்டுகொள்ளாத சூழ்நிலையில், எதிர்வரும் 08.05.2018 அன்று சென்னை கோட்டை முற்றுகைப் போராட்டத்தை நடத்துவது என்ற ஜாக்டோ-ஜியோ உயர் மட்டக்குழு முடிவினை ஒட்டி அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களை தயார்படுத்தும்விதமாக 23.04.18 முதல் 27.04.18 வரை பிரச்சார இயக்கம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக 23.04.18 காலை பிரச்சார துவக்க நிகழ்ச்சி நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் நடைபெற்றது. மாவட்ட



ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.ட்டீ.அன்பழகன், பா.ரவி, வெ.சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர். உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் ப.அந்துவன் சேரல் (புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்கம்), எம்.சௌந்தர்ராஜன் (கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம்) மற்றும் க.மீனாட்சிசுந்தரம் (பொதுச் செயலாளர், ஆசிரியர் மன்றம்) ஆகியோர் மாநிலக் குழு சார்பில் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ஊரக வளர்ச்சித் துறையின் எஸ்.ஜோதிமணி நன்றி கூறினார். நாகை நடராஜன் தமயந்தி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றுவரும் விடைத்தாள் திருத்தும் மையம் மேலும் தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகங்களிலும், செம்பனார்கோவில், சீர்காழி, கொள்ளிடம் மற்றும் மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் பிரச்சாரம் நடைபெற்றது.

ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் பொய் வழக்கினால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள எம்.முருகன் என்பவருக்கு பணி ஆணை வழங்க வலியுறுத்தி நாகை மாவட்ட ஜாக்டோ-ஜியோ சார்பில் 20-04-18 அன்று நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. அரசு ஊழியர்- ஆசிரியர்களின் பேரமைப்பு சார்பில் ஊதிய மாற்றம் சிபிஎஸ் ரத்து,சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து,ஊதிய முரண்பாடுகளை களைதல் உள்ளிட்ட கோரிக்கை



களுக்காக கூட்டமைப்பு சார்பில் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் நடைபெற்றது. வேலைநிறுத்தத்தின் போது நீதிபதியை விமர்சனம் செய்ததாக பதியப்பட்ட பொய் வழக்கின் அடிப்படையில் திருநல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அரசு ஊழியர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் தொழில்நுட்பப் பணியாளராக பணிபுரியும் எம்.முருகன் என்பவரை 2017, அக்டோபர் 25ஆம் தேதி முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு 8 மாதங்களாகியும் பணி வழங்காமல் தமிழக அரசு காலம் தாழ்த்தி வருகிறது. தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்து உடனடியாக பணி வழங்க கோரி ஆர்பாட்டம் எழுச்சியாக நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பா.ரவி மற்றும் வெ.சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். உயர்நிலை மேல்நிலை பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாநிலச் செயலாளர் எஸ்.அசோக்குமார் வாழ்த்துரை வழங்கினார். ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக்குழு உறுப்பினர் பா.அந்துவன் சேரல் நிறைவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார்.



இதே கோரிக்கையை வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எம்.சுருளிநாதன், பொன்.ரத்தினம்,பி.எம்.கௌரன் ஆகியோர் தலைமை வகித்தனர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி, துறைவாரி சங்க நிர்வாகிகள் எம்.சிவப்பிரகாசம், எம்.யோகராசு, ஆசிரியர் அமைப்பின் பி.சசிக்குமார், துரைராஜ், ச.கவிதா, எஸ்.மைதிலிசங்கர், பி.அசோகன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தொழிற்சங்க கூட்டமைப்பு

நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் உலகத் தொழிலாளர்கள் தினமாம் மே தின கொடியேற்ற நிகழ்ச்சி 01.05.2018 அன்று காலை 07.00 மணிக்கு வருமான வரித்துறை அலுவலகத்தில் துவங்கி, தொலைபேசி இணைப்பகங்கள், நகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகம், எல்.ஐ.சி



அலுவலகம், போக்குவரத்து பணிமனைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் நீதிமன்ற வளாகம் உள்ளிட்டு 46 இடங்களில் கொடியேற்ற நிகழ்வுகள் நடைபெற்றன. தொழிற் சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றது. கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சு.மணி, அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் ப.அந்துவன்சேரல், ஏ.ட்டீ.அன்பழகன், பா.ராணி, சி.பாலசுப்பிரமணியன், எம்.தமிழ்வாணன், துறைவாரி சங்க நிர்வாகிகள் கே.ராஜூ, சி.கலிய பெருமான், ஜி.ராமகிருஷ்ணன், கே.புகழேந்தி, சி.வாசு, ப.ஜீவானந்தம், மோகன், கந்தசாமி, பி.எஸ்.என்.எல் நிர்வாகிகள் சண்முகம், போக்கு வரத்து சங்க நிர்வாகிகள் பஞ்சநாதன், ஜீவா, ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள் சொ.கிருஷ்ணமூர்த்தி, பி.ஆசைத்தம்பி, அஞ்சல் துறை ஊழியர் சங்கத்தின் வெங்கடேசன் உள்ளிட்டு பல்வேறு சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினர். நிறைவாக, தொழிற்சங்க கூட்டமைப்பு பொருளாளர் வி.பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார். இனிப்பு, மோர், பானகம், சர்க்கரைப் பொங்கல் மற்றும் உணவுகள் வழங்கி உற்சாகமாக தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது.

## கிராம சுகாதார செவிலியர் சங்கம்

தாய்மார்கள் கருவுறுவது முதல், தடுப்பூசி உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஓய்வின்றி செய்துவரும் நிலையில், புதிய திட்டமான பிரதம மந்திரி ராஷ்டிரிய ஸ்வஸ்திய சுரக்ஷா மிஷன் என்ற காப்பீட்டுத் திட்ட கணக்கெடுக்கும் பணியினையும் கிராம சுகாதார செவிலியர்கள் செய்ய வேண்டும் என்ற அரசு உத்தரவை விலக்கிக் கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம் சார்பில் 30.04.2018 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரகத்தில் "பெருந்திரள் முறையீடு"



ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் எம்.மரகதம் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் பா.ராணி விளக்கவுரையாற்றினார். நீதித் துறை ஊழியர் சங்கத்தின் எஸ்.புகழேந்தி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் கே.ராஜூ, அரசு ஊழியர் சங்க வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், ஓய்வூதியர் சங்கத்தின் பி.ஆசைத்தம்பி, நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு பொருளாளர் வி.பாலசுப்பிரமணியன், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புள்ளியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் ப.அந்துவன்சேரல் நிறைவுரையாற்றினார். கிராம சுகாதார செவிலியர் திருக்கடையூர் சுபத்ரா நன்றிகூறினார்.

## அனைத்து மருந்தாளுநர் சங்கம்

புதிய பென்சன் திட்டம், தொகுப்பூதியம், அவுட்சோர்சிங், ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும், காலியாக 1400 மருந்தாளுநர்



பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்கம் வடசென்னை-தென் சென்னை மாவட்டக் குழுக்கள் சார்பில் வெள்ளியன்று ராஜீவ்காந்தி அரசு பொதுமருத்துவமனை வளாகத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ❖

## ஊதிய மாற்றத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை களைவதற்கான ஒரு நபர் குழு அமைப்பு ஆணை

©
GOVERNMENT OF TAMIL NADU
2018

MANUSCRIPT SERIES

# FINANCE (PAY CELL) DEPARTMENT
# G.O.Ms.No.138, Dated: 24th April, 2018

*(Vilambi, Chithirai-11, Thiruvalluvar Aandu 2049)*

**Tamil Nadu Revised Pay Rules, 2017**– Constitution of One Man Committee for rectification of pay anomalies–Amendment- Orders - Issued.

**Read:**

G.O.Ms.No.57, Finance (Pay Cell) Department, Dated:19.02.2018.

******

**ORDER:-**

In the Government Order read above, orders were issued constituting a One Man Committee to rectify the pay anomalies arising due to implementation of Tamil Nadu Revised Pay Rules, 2017.

2. The following amendment is issued to the said Government Order:-

**AMENDMENT**

For the sub-para (i) in para (4) the following sub-para shall be substituted namely:-

"(i) Representations on pay anomalies, if any, consequent on the implementation of the revised pay levels or clarification in the method of fixation of pay in the revised pay structure or other allied benefits including Special Pay, Allowances, etc., shall be examined by the One Man Committee".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**Section Officer**

## காலியிடங்கள் நிரப்புதல் தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகள் தொடர்பான ஆணை

### ABSTRACT

Public Services – Fixing the estimate of vacancies – Revised procedure – Orders – Issued.

### PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (S) DEPARTMENT

**G.O.(Ms.)No.33**

**Dated: 06.04.2018**
ஹேவிளம்பி, பங்குனி-23,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

**Read:**

G.O.(Ms.) No.123, Personnel and Administrative Reforms(S) Department, dated 10.09.2009.

-------

**ORDER:**

In the Government Order read above, orders were issued prescribing certain procedure for fixing the estimate of vacancies under the method of direct recruitment/promotion/recruitment by transfer.

2. On re-examination, it has been decided to revise the procedure for fixing the estimate of vacancies, so as to speed up the selection process. Accordingly, the following revised guidelines are issued.

(i) In respect of the posts to be filled up by the method of **direct recruitment** for which the **Government is the appointing authority**, the estimate of vacancies shall be fixed by the concerned administrative department after obtaining the approval of the Personnel & Administrative Reforms Department.

ii) In respect of the posts to be filled up by the method of **promotion / recruitment by transfer** for which **Government is the appointing authority** the estimate of vacancies shall be fixed by the concerned administrative department after obtaining the approval of the Personnel & Administrative Reforms Department.

iii) In respect of the posts to be filled up by the method of **direct recruitment** for which the **Head of the Department is the appointing authority**, the estimate of vacancies shall be fixed by him without obtaining the approval of the Finance, Personnel and Administrative Reforms Departments and Staff Committee.

iv) In respect of the posts to be filled up by the method of **direct recruitment**, for which the **subordinates to the Head of the Department is the appointing authority**, the estimate of vacancies shall be fixed by the concerned appointing authorities, without obtaining the approval of the Finance, Personnel and Administrative Reforms Departments and Staff Committee.

v) In respect of the posts for which the selection is to be made through recruiting agencies like Tamil Nadu Public Service Commission, Teachers Recruitment Board, etc., the estimate of vacancies fixed by the respective appointing authorities shall be furnished to the recruiting agencies by the concerned Head of the Department after consolidation.

vi) In respect of the posts to be filled up by the method of **promotion/recruitment by transfer**, for which **Head of the Department or his subordinate is the panel drawing authority**, the estimate of vacancies shall be fixed by the respective panel drawing authority after following the instructions in force.

3. The above instructions shall be followed scrupulously.

(BY ORDER OF THE GOVERNOR)

S. SWARNA
SECRETARY TO GOVERNMENT

//Forwarded by order//

N. Vijay 6/4/18
SECTION OFFICER

## நீட் எழுத வரும் தமிழக மாணவர்களுக்கு உதவி கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

மருத்துவப்படிப்புக்கான நீட் தேர்வு எழுத கேரளாவிற்கு வருகின்ற தமிழக மாணவர்களுக்கு கேரள அரசு உதவி செய்யும் என்று அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.தமிழக மாணவர்களுக்கு கேரளாவில் உள்ள பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்களில் உதவி மையங்கள் அமைக்கப் படும். தங்கும் வசதி செய்துதரப்படும். தேர்வு மையங்களுக்குச் செல்ல போக்குவரத்து வசதி செய்து தரப்படும் என்றும் இதுகுறித்து மாவட்ட ஆட்சியர்கள், காவல் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமின்றி இந்திய மாணவர் சங்கத்தின் கேரள மாநிலக் குழுவும் நீட் தேர்வு எழுத வரும் மாணவ, மாணவிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக அம்மாநிலக் குழு முடிவெடுத்துள்ளது. தமிழக மாணவ, மாணவிகள் வந்து இறங்கும் ரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அம்மாநிலக் குழு முடிவு செய்துள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வரவேற்கிறது.

**W.P.Nos.26718/2016, 557/2017, 1894/2015, 1895/2015 & 22554/2017**

**N.KIRUBAKARAN, J.**

When the matter is taken up for hearing today, it is brought to the notice of this Court that one Mr.Murugan, who is working in Government Motor Vehicle Maintenance Department, Palayamkottai has been suspended on the allegation that he has made abusive comments about the judiciary, especially against this Court. Therefore, the police authorities had registered a case against him and he was arrested and thereafter, released on bail. In the meanwhile, departmental action has also been taken and he has been placed under suspension from September 2017 onwards.

2.Mr.N.Senthil Kumar, learned counsel appearing for the petitioner in W.P.No.22554 of 2017 would submit that action should be taken against the said Mr.Murugan both on the criminal side as well as on the departmental side and only then this kind of element will not wag their tails. He would further submit that if this kind of persons are allowed to go scot free, it will affect the very justice delivery system as well as the majesty and dignity of the Court.

WEB COPY

3.On the other hand, Mr.Munusamy, learned Special Government Pleader (Education) and Mr.T.M.Pappiah, learned Special Government Pleader would contend that necessary action has been taken against the said Mr.Murugan, as per law.

4.This Court is convinced with the action taken by the Government against the aforesaid person. Further, taking into consideration of the fact that the said Mr.Murugan has been placed under prolonged suspension from the month of September 2017 and for the past seven months he is out of work, this Court is inclined to direct the Government authorities to revoke the suspension order passed against the said Mr.Murugan.

5.There is no representation on behalf of Mr.G.Sankaran, who appears on behalf of the teachers association. For filing status report, call the matter on 26.04.2018.

**23.04.2018**

pgp

**N.KIRUBAKARAN, J.**

pgp

W.P.Nos.26718/2016, 557/2017, 1894/2015, 1895/2015 & 22554/2017

Dated : 23.04.2018

*அன்பார்ந்த தோழர்களே, வணக்கம்.*

*ஜாக்டோ ஜியோ வேலை நிறுத்த போராட்டத்தின் போது நெல்லை மாவட்ட காவல்துறையினரால் நெல்லை மாவட்ட MVMD தோழர் வி.முருகன் மீது பொய்வழக்கு புனையப்பட்டு கைது செய்யப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். கடந்த 23.4.2018 அன்று சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்தி தோழர் முருகன் அவர்களுக்கு மீண்டும் பணி நியமனம் வழங்குமாறு MVMD இயக்குநரை 30.4.2018 அன்று TNGEA மாநில நிர்வாகிகள் நேரில் சென்று சந்தித்து கேட்டுக் கொண்டனர்.*

*நமது கோரிக்கையை கனிவுடன் பரிசீலிப்பதாக கூறிய இயக்குநர் திருநெல்வேலி Automobile Engineer அவர்களுக்கு உரிய உத்தரவு பிறப்பித்துள்ளதின் அடிப்படையில் திரு. முருகன் மீதான தற்காலிக பணிநீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டு 3.5.2018 முற்பகல் மீண்டும் அதே பணியிடத்தில் மீளப் பணியில் சேர்ந்தார் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கான ஆணை மேலே உள்ளது.*

***மு.அன்பரசு**, பொது செயலாளர்*

# மோசடி முதலாளித்துவம்!

மொத்த மதிப்பில் இந்தியாவின் மூன்றாவது பெரிய வங்கியும், தனியார் வங்கிகளில் முதல் இடத்தில் இருப்பதுமான ஐசிஐசிஐ வங்கியில் நடைபெற்று இருக்கும் முறைகேடு வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. விரைவிலேயே ஐசிஐசிஐ வங்கியின் தலைமை நிர்வாகி சந்தா கோச்சார் பதவி விலகக்கூடும் என்கிற எதிர்பார்ப்பு பரவலாகவே காணப்படுகிறது.

1969 ஜூலை 19-ஆம் தேதி என்ன காரணத்துக்காக அன்றைய இந்திரா காந்தி அரசு 14 தனியார் வங்கிகளை நாட்டுடைமையாக்கியதோ, அதற்கான காரணங்கள் இப்போதும் வலுவாகவே இருக்கின்றன என்பதைத்தான், ஐசிஐசிஐ வங்கியின் செயல்பாட்டில் காணப்படும் சார்புச் சலுகைகள் (நெப்பாடிசம்) வெளிப்படுத்துகின்றன. நேரிடையாக தலைமை நிர்வாகி சந்தா கோச்சாரை இதற்காகக் குற்றப்படுத்த முடியாது என்றாலும், நடந்திருக்கும் முறைகேட்டில் சம்பந்தப்பட்டிருப்பது அவரது கணவர் என்பதால், அவர் தார்மிக பொறுப்பிலிருந்து நழுவிவிட முடியாது.

வங்கிகளில் சேமிப்பாகவும், வைப்புத் தொகையாகவும் தங்களது பணத்தைப் போட்டிருக்கும் சிறு முதலீட்டாளர்களுக்கு அந்தப் பணம் வங்கிகளால் எங்கே, யாருக்கு மறு முதலீடு செய்யப்படுகிறது, எப்படி கையாளப்படுகிறது என்பது குறித்த எந்த விவரமும் தெரியாது. வங்கி நிர்வாகத்தின் முடிவுப்படி கடன்கள் வழங்கப்படுகின்றன. இப்படி, வெளிப்படைத்தன்மை இல்லாமல் மற்றவர்களுடைய பணத்தில் நடத்தப்படும் வியாபாரம்தான் வங்கிச் சேவை.

வங்கிகளைக் கண்காணிப்பதும், ஒழுங்காற்றுவதும் ரிசர்வ் வங்கியின் கடமை. வங்கிகளின் தவறான நிர்வாக முறையினாலோ, செயல்பாட்டினாலோ வங்கியில் முதலீடு செய்திருக்கும் சாமானிய




சந்தா கோச்சார்

வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதுதான் இலக்கு. வங்கியின் செயல்பாடு, கணக்குத் தணிக்கை, வங்கி நிர்வாகத்தின் நேர்மை இவற்றையெல்லாம் கண்காணிக்கும் பொறுப்பு ரிசர்வ் வங்கிக்கு உண்டு.

பொதுத்துறை வங்கிகளாகட்டும், தனியார் வங்கிகளாகட்டும், இவற்றின் வாராக்கடன் பல லட்சம் கோடியாக உயர்ந்திருப்பதற்கு மிக முக்கியமான காரணம், சரியான நேரத்தில் வங்கிகளின் கடன் வழங்கும் போக்குக் குறித்து ரிசர்வ் வங்கி சரியாக கண்காணிக்காமல் இருந்ததும், வாராக்கடன் அதிகரித்தபோது உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படாததும்தான். வங்கிக் கண்காணிப்பாளரான ரிசர்வ் வங்கி, வங்கிகளின் பலவீனத்தை மறைப்பதற்கும், வாராக்கடன்கள் வளருவதற்கும் துணை போயிருக்கிறது என்கிற உண்மையை என்ன காரணத்தினாலோ ஆட்சியாளர்கள் வெளிப்படுத்துவதில்லை.

கடந்த டிசம்பர் 2017 அளவில் இந்திய வங்கித் துறையின் வாராக்கடன் அளவு ரூ.8.4 லட்சம் கோடி. இந்த வாராக்கடனில் இருந்து வங்கிகளைக் காப்பாற்றுவதற்காக அரசு நமது வரிப்பணத்திலிருந்து வங்கிகளுக்கு செய்திருக்கும் மறு முதலீடு ரூ.2.11 லட்சம் கோடி. இந்தப் பின்னணியில்தான் பஞ்சாப் நேஷனல் வங்கி உள்ளிட்ட பொதுத்துறை வங்கிகளும், ஐசிஐசிஐ வங்கி உள்ளிட்ட தனியார் துறை வங்கிகளும் தவறான அல்லது முறைகேடான முடிவினால் ஏற்படுத்தியிருக்கும் பல லட்சம் கோடி வாராக்கடன்களை நாம் பார்க்க வேண்டும்.

ஐசிஐசிஐ வங்கி என்பது தனியார் வங்கி என்று நாம் ஒதுக்கிவிட முடியாது. காரணம், அந்த வங்கியில் சேமிப்பாகவும், வைப்புத் தொகை யாகவும் முதலீடு செய்திருக்கும் வாடிக்கையாளர்கள் இந்தியக் குடிமக்கள். இந்த வங்கியின் கணிசமான பங்குகள் பொதுத்துறை நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம், இந்திய பரஸ்பர நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் முதலீடுகள். அப்படி இருக்கும்போது, இதைத் தனியார் வங்கியின் முறைகேடு என்று எப்படி ஒதுக்கிவிட்டுப் பார்ப்பது?

விடியோகான் நிறுவன அதிபர் வேணுகோபால் தூத், ஐசிஐசிஐ வங்கியின் தலைமை நிர்வாகி சந்தா கோச்சாரின் கணவர் தீபக் கோச்சாருடன் இணைந்து 2008-இல் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார். அந்த நிறுவனத்துக்கு வேணுகோபால் தூத்தின் இன்னொரு நிறுவனம் மார்ச் 2010-இல் ரூ.64 கோடி கடனாக வழங்கியது. மேலும் பல வணிக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, கடன் கொடுத்த நிறுவனம் ஏப்ரல் 2013-இல் தீபக் கோச்சாரின் கட்டுப்பாட்டில் உள்ள ஓர் அறக்கட்டளையால் முழுமையாக வாங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, வேணுகோபால் தூத், முதலில் தொடங்கிய நிறுவனத்திலிருந்த தனது 50 சதவீத பங்குகளை வெறும் ரூ.2.5 லட்சத்துக்கு தீபக் கோச்சாருக்கு மாற்றம் செய்து கொடுத்து விட்டார். இதெல்லாம் ஒருபுறம்.

வேணுகோபால் தூத்தின் வீடியோகான் நிறுவனத்துக்கு ஏப்ரல் 2012-இல் ஐசிஐசிஐ வங்கி ரூ.3,250 கோடி கடனாக வழங்குகிறது. அதாவது, தூத்துக்கும் தீபக் கோச்சாருக்கும் இடையேயான வணிக ஒப்பந்தங்கள் முடிவடைவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னால். இப்போது விடியோகான் நிறுவனம் 20 வங்கிகளுக்குத் தர வேண்டிய மொத்த வாராக்கடன் தொகை ரூ.40,000 கோடி. அதில் ஐசிஐசிஐ வங்கிக்கு மட்டும் ஏற்பட்டிருக்கும் வாராக்கடன் ரூ.3,250 கோடி. இதுதான் இந்த முறைகேட்டின் பின்னணி.

சாமானியன் வங்கிக் கடன் வாங்க வேண்டும் என்றால், அதற்கு நூறாயிரம் கேள்விகள், ஆவணங்கள் தேவைப்படுகின்றன.

அதற்குப் பிணையாக அரசு ஊழியரோ, அசையாச் சொத்தோ கோரப்படுகிறது. கடன் திருப்பிக் கொடுக்கப்படாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவது மட்டுமல்லாமல், ஊடகங்களில் கடனாளி குறித்த தகவல் படத்துடன் வெளியிடப் பட்டு அவமானப்படுத்தப்படுகிறார்கள். ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்கள் குறைந்த வட்டியில் கோடிக்கணக்கில் பணத்தைக் கடனாகப் பெற்றுத் திருப்பித் தராமல் ஏமாற்றினாலும், அதன் இயக்குநர்கள் கௌரவமாக வலம் வருகிறார்கள். இதற்குப் பெயர்தான் மோசடி முதலாளித்துவம் (க்ரோனி கேப்பிடலிஸம்).

**நன்றி : தினமணி**

### இந்த ஆண்டு நோபல் பரிசு யாருக்கும் இல்லை

உலகிலேயே மிகவும் மதிப்பு மிக்க விருதாகக் கருதப்படும் நோபல் பரிசு 2018-ம் ஆண்டு யாருக்கும் வழங்கப்படாது என்று பரிசு வழங்கும் தி சுவீடன் அகாடமி அறிவித்துள்ளது. பாலியல் புகார்கள், நிதி மோசடிகள் காரணமாக இந்த ஆண்டு விருது வழங்குவதும், தேர்வு செய்யப்படுவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் விருது வழங்கும் அமைப்பு அறிவித்துள்ளது. கடந்த 75 ஆண்டுகளில் முதல் முறையாக நோபல் பரிசு விருதுகள் அறிவிக்கப்படாமலும், தேர்வு செய்யப்படாமலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து நோபல் பரிசு வழங்கும் சுவீடன் அகாடமியின் நிரந்தர செயலாளர் ஆன்டர்ஸ் ஆல்ஸன் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது: நோபல் பரிசு வழங்கும் சுவீடன் அகாடமியில் உள்ள உறுப்பினர்கள் பலரும் தற்போது நிலவும் சிக்கல், பிரச்சனைகள் குறித்து அறிந்திருப்பார்கள் என நம்புகிறேன். நீண்டகால நோக்கில் சில மாற்றங்களைச் சேர்க்க கோரிக்கை எழுந்துள்ளது. புதிய நோபல் பரிசு பெறுபவர்களை அறிவிக்கும் முன் மக்களிடம் இழந்த நம்பிக்கையை நாங்கள் மீட்டெடுப்பது மிகவும் அவசியமாகிறது. பொதுமக்களின், நோபல் அறக்கட்டளையின், எதிர்கால பரிசு பெறுபவர்கள், கடந்த காலத்தில் பரிசு பெற்றவர்கள் ஆகியோரின் மரியாதையை கேள்விக் குறியாக்கி இருக்கிறது.இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நோபல் பரிசு வழங்கத் தொடங்கியதில் இருந்து பாலியல், நிதிமோசடி ஆகிய காரணங்களால் இதுவரை நிறுத்தப்பட்டதில்லை. ஆனால், முதலாம், 2-ம் உலகப்போரின் போது பரிசுகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக 1914, 1918, 1935, 1940, 1941, 1942 மற்றும் 1943 ஆகிய ஆண்டுகளில் நோபல் பரிசு வழங்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ❖

# சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு: உரிமையின் நூறு ஆண்டுகள்

முதல் உலகப் போருக்குப் பிறகு, வெர்சைல்ஸ் உடன்படிக்கையின்படி 1919-ல் தொடங்கப்பட்ட சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு, நூற்றாண்டு விழாவில் அடியெடுத்து வைக்கவிருக்கிறது. கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில், தொழிலாளர் நலன்களைக் காக்கும் நடவடிக்கைகளில் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் பங்கு மிக முக்கியமானது.

கட்டுப்பாடு இல்லாத மூலதனப் பெருக்கம், அதிக வேலை நேரம், குறைவான கூலி, உழைப்புச் சுரண்டல், மனித உரிமை மீறல் என்றிருந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொழில் துறையில் ஒரு தரநிலையை உருவாக்க வேண்டிய தேவை எழுந்ததன் விளைவுதான் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு.

முக்கியமாக, ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு உலகெங்கும் ஒலிக்க ஆரம்பித்த தொழிலாளர்களின் உரிமைக் குரலுக்குக் காது கொடுத்தாக வேண்டியதன் அவசியமும் இருந்தது. உலகப் போரைக் காரணம் காட்டி தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டுவந்த சிறந்த வாழ்க்கைத் தரத்தையும் மேம்பட்ட பணிச் சூழலையும் இனிமேலும் தள்ளிப்போட முடியாது என்ற நிலையில், சர்வதேச அளவில் தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்துவதற்கான அதிகாரமும், உடன்படிக்கைகளில் கையெழுத்திட்ட நாடுகள் அதைப் பின்பற்றுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் அதிகாரமும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்துக்கு அளிக்கப்பட்டன.

### தொழிற்சங்கங்களின் தோழன்

இதற்கு முன் இப்படி சர்வதேச அளவில் அரசுகளையும், தொழில் நிறுவனங்களையும் கட்டுப்படுத்துகிற அமைப்பு ஏதும் இருந்ததில்லை. இது அரசுகளின் கூட்டமைப்பு அல்ல, தொழிலாளர்களும் தொழில் நிறுவனங்களை நடத்தும் முதலாளிகளும் இதில் அங்கம் வகிக்கிறார்கள். சோஷலிசப் புரட்சிக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்பதற்காக முதலாளித்துவம் தொழிலாளர்களோடு ஒத்திசைந்து செல்லும் கட்டாயத்துக்கு ஆளானது என்பதற்கு சர்வதேசத் தொழிலாளர் அமைப்பே உதாரணம். அமைப்பு தொடங்கப்பட்டபோதே, இந்தியா அதன் உறுப்பு நாடானது. சுதந்திரம் பெறாத நிலையில், அவ்வமைப்பின் உறுப்பினராக இருந்த ஒரே நாடு இந்தியாதான்.




இந்தியாவில் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊக்கம் பெறுவதற்கு சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு முக்கியப் பங்காற்றியிருக்கிறது. அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏஐடியுசி) உருவாக்கத்துக்கும் இது ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. தொடக்கக் காலத்தில், இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர்களால் ஏஐடியுசி வழிநடத்தப்பட்டது. காந்தியை நவீனத் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தை என்று அழைத்தார் தொழிற்சங்க வாதியும் முன்னாள் குடியரசுத் தலைவருமான வி.வி.கிரி. பொறுப்புணர்வு, நியாயமான கோரிக்கைகள், முறையான பேரம், தேவைப்பட்டால் சமரசம் ஆகியவற்றைத் தொழிற்சங்கங்களுக்கு வலியுறுத்தினார் காந்தி. ஏறக்குறைய சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு பரிந்துரைக்கும் தொழிற் சங்கச் செயல்பாடுகளும் அத்தகையதே.

சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் முதலாவது ஆசியக் கிளை 1928-ல் டெல்லியில் தொடங்கப்பட்டது. 1929-ல் தொழிலாளர் நிலைகுறித்த ராயல் கமிஷன் அறிக்கையை விவாதப் பொருளாக்கியது, இந்தக் கிளையின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். 1931-ல் நடந்த வட்ட மேஜை மாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன்னால், தொழிலாளர்களின் குறைந்தபட்ச உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான அரசியல் சட்ட விதிகளை இயற்றுவதற்கு, சர்வதேசத் தொழிலாளர் அமைப்பிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றார் தொழிற்சங்கத் தலைவரான என்.எம்.ஜோஷி. 1934-ல் தொடங்கி 1944

வரைக்கும் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் நிர்வாகக் குழுவில் இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக அவர் பொறுப்பு வகித்தார்.

### ஐ.நா.வின் அங்கமானது

முதலாம் உலகப் போரின் கசப்பான நிகழ்வுகள் மீண்டும் நடந்துவிடக் கூடாது என்ற குறிக்கோளில் உருவான உலக நாடுகள் சங்கம், இரண்டாம் உலகப் போரால் செயலிழந்தது. எனினும், இரண்டாம் உலகப் போருக்குப் பின், ஐநா அவையின் அங்கமாக மாறியது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு. 1944-ல் பிலடெல்பியா உடன்படிக்கை, அந்த அமைப்பைத் தொழிலாளர் உலகின் மனித உரிமைப் பாதுகாவலராக ஏற்றுக்கொண்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு காலனியப் பிடியிலிருந்து ஆசிய நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளும் விடுபட்டன. எனவே, முதலாளித்துவ நாடுகளின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர அமைப்பாக இயங்கும் வாய்ப்பினை சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு பெற்றது. அந்த அமைப்பு மேற்கொண்ட உடன்படிக்கைகளின் காரணமாக உலகெங்கும் கூட்டுப் பேரங்களையும் தொழிற்சங்க நடவடிக்கை களையும் தவிர்க்கவியலாமல் ஏற்றுக்கொள்ளும் சூழல் உருவானது.

சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் - தொழி லாளர்களின் வேலை நேரம், பாதுகாப்பு, சுகாதாரம், சமூகக் காப்பீடு தொடர்பான - பல்வேறு உடன் படிக்கைகளை இந்தியா நடைமுறைப்படுத்தி யிருக்கிறது. முத்தரப்புப் பேச்சுவார்த்தை முறை யினையும் பின்பற்றிவருகிறது. இந்தியாவின் தொழிலாளர் நலச் சட்டங்களுக்கும் சமூகப் பாது காப்புச் சட்டங்களுக்கும் சர்வதேசத் தொழிலாளர் சங்கம் வழிகாட்டியாக இருந்திருக்கிறது. சர்வதேச அமைப்பில் அங்கம்வகித்த இந்திய அதிகாரிகள், உலகளாவிய தொழிலாளர் நல மேம்பாட்டுக்குப் பங்காற்றியிருக்கிறார்கள். அமர்த்தியா சென் உள்ளிட்ட இந்தியாவின் பொருளாதார ஆய்வறி ஞர்கள், சர்வதேசத் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஆலோசனைகளை வழங்கி யிருக்கிறார்கள்.

### உலகமயம் என்னும் சவால்

இந்தியா சுதந்திரம் பெற்ற இரண்டு மாதங்களில் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் முதலாவது ஆசிய பிராந்திய மாநாடு டெல்லியில் நடைபெற்றது. அதில் பங்கேற்றுப் பேசிய ஜவஹர்லால் நேரு, சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு ஐரோப்பிய மனப்பான்மையிலிருந்து விடுபட்டு, ஆசியாவின் தனித்தன்மை கொண்ட பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தொழிற்சாலைகளுக்கு வெளியே விவசாயத் தொழிலாளர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். 1985-ல் ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அமைப்புசாரா தொழிலாளர் களுக்கும் உரிய கவனம் அளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர் களின் நலன்களைப் பாதுகாப்பதில் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு குறிப்பிடத்தக்க வெற் றியைப் பெற்றிருக்கிறது என்பதை மறுப்பதற் கில்லை. ஆனால், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பளிக்க அது முனைந்து நிற்க வில்லை. இப்போது, சோவியத் வீழ்ச்சிக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் நடைமுறைக்கும் பிறகு, புதிய சிக்கல்களும் எழுந்துள்ளன. தொழி லாளர் சந்தை நெகிழ்வோடு இருக்க வேண்டும் என்பதே புதிய பொருளாதாரக் கொள்கையின் கோரிக்கையாக இருக்கிறது. உலகமயத்தின் விளை வாக, தொழிலாளர் நலச் சட்டங்கள் வலுவிழந்து வரும் நிலையில், சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறதோ என்ற கேள்வியும் எழுகிறது. நூற்றாண்டுக் கொண்டாட்டத் தின் இடையே 21-ம் நூற்றாண்டின் தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றியும் அது கருத்தில்கொள் ளட்டும்!


**நன்றி : தி ஹிந்து தமிழ் (1.5.2018)**

**வாசகர் கடிதம்**

வணக்கம். மார்ச் 2018 இதழ் படித்தோம். பொதுச் செயலாளர் மேசையிலிருந்து கட்டுரையில் ‘அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும்’ என்ற வரி நூற்றுக்கு நூறு உண்மையாகின்றது. ஆர்.நடராஜன் அவர்களின் தோழி எழுக, மொழிவது அன்பு கவிதைகள் சிறப்பாக உள்ளன.

- **ஐ.ஷேக் முகம்மது**, அலங்கியம்

**இருக்கும்போது இரத்த தானம்!**
**இறந்த பின் கண் தானம்,**
**உடல் தானம் செய்வோம்!**




Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com